விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை (08.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 111

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பொருளாதாரத் தடை இலங்கைக்கு ஏற்படலாம்

## இராஜதந்திரிகள் எச்சரிக்கை

**(கொழும்பு) இலங்கைக்கு எதிராக உலக நாடுகள் பொருளாதாரத் தடையை விதிக்க கூடிய சாத்தியம் அதிகரித்து வருவதாக இராஜதந்திரிகள் அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளனர்.**

இலங்கைக்கு எதிராக ஐ.நா.மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடரில், கொண்டுவரப் பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து, போர்க் குற்ற விசாரணை மற்றும் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் சாதக மான சமிக்ஞைகளை இலங்கை அரசு வெளியிடுமென்றே அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எதிர்பார்த்தன.

ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக, இலங்கை அரசு தீர்மானத்தை கொண்டு வந்த அமெரிக் காவையும் அதனை ஆதரித்த இந்தியா உள்ளிட்ட (02ஆம் பக்கம் பார்க்க)

## நவநீதம்பிள்ளையின் விஜயம் இடைநிறுத்தம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் இலங்கை விஜயம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு (02ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனை ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி முயற்சி

(கொழும்பு)

ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரனை மாகாண சபையின் ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டு உள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், சி.வி.விக்னேஸ்வரனை ஆளுநராக நியமிப்பதற்காக, ஏற்கெனவே பதவியில் உள்ள ஆளுநர் ஒருவரின் பதவி முடிபுறுத்தப்படவுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் எந்த மாகாணத்தில் இது இடம்பெறவுள்ளது என்பதை இப் (24ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கை அரசின் அசமந்தத்தாலேயே தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது-இந்து

(சென்னை)

13-வது அரசியல் அமைப்பு திருத்தத்தை செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அசமந்தமாக செயற்பட்டமையே இந்தியா, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களித்தமைக்கு காரணம் என இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்து நாளிதழுக்கு கருத்து வெளியிட்டுள்ள எழுத்தாளர் ஒருவரான நிரூபமா சுப்பரமணியம் இந்த விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இலங்கை, ஜெனவாவில் வெற்றி கொண்ட யோசனையிலும் இது குறித்த சரத்தொன்றும் உள்ளடங்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு யுத்தத்தின்போது, இலங்கை மனித உரிமைகளை மீறியதாக அங்கு வெளியிடப்பட்ட பிரேரணை (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி மாற்றுக்குழு தலைவர் கடத்தப்பட்டார்



பிரேம்குமார் குணரட்னம் — திமுத்து ஆட்டிகல

(கொழும்பு)

ஜே.வி.பி. கட்சியிலிருந்து பிரிந்து நான்கு மாதங்களுக்கு முன்னர் மக்கள் போராட்ட இயக்கம் என்ற குழுவை (24ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்வை கைவிடவே 'தெரிவுக்குழு' நாடகம்-ரில்வின் சில்வா

வடக்கில் சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டி அங்கு வாழும் மக்கள் எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு மகிந்த அரசாங்கம் தீர்வை வழங்கினால் தமிழ் மக்கள் தனி ஈழத்தைக் கோரப் போவதில்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக் ஆணைக்குழுவில் தீர்வு இல்லையெனக் குறிப்பிட்ட அவர், இனப்பிரச் சினைக் கான தீர்வைக் கைவிடவே மகிந்த அரசாங்கம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ;நல்லிணக்க ஆணைக்குழு விவகாரம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகை ஆகியவை குறித்து கருத்து வெளியிடும் போதே ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு, (02ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் பவுஸர் உரிமையாளர்கள் பகிஷ்கரிக்கப் போவதாக எச்சரிக்கை

(கொழும்பு)

எரிபொருள் கொண்டு செல்வதற்கான கட்டணங்களை அதிகரிக்க வேண்டுமென்ற தமது கோரிக்கைகளை நிறைவேற்றா விட்டால் ஏப்ரல் 9, 10 ஆம் திகதிகளில் எரிபொருள் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை இடைநிறுத்தப்போவதாக இலங்கை தனியார் பெற்றோலிய பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அண்மையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதையடுத்து, தமது கட்டணங்களை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலிய (24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நாடாளுமன்றக் குழு கூட்டமைப்பைச் சந்திக்கும்

இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய நாடாளுமன்றக் குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளது.

இந்திய எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழு எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்து இந்திய அரசுக்கு தெரிவிக்கும் நோக்குடன் இலங்கைக்கு விஜயம் செய்யும் இக்குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து தமிழ் மக்களின் தற்போதைய நிலைமைகள் குறித்து கேட்டறிய உள்ளதாக (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பு செயலராக பாரத லக்ஷ்மனின் மனைவி நியமனம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரனின் மனைவி சுமனா பிரேமச்சந்திர நியமிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கார்டியன் செய்திவெளியிட்டுள்ளது.

இந் நியமனம் குறித்து சுட்டுக்கொல்லப் பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலைக்கு நீதிகிடைக்க வேண்டும் என பரப்புரைகளை மேற்கொண்டு வருபவர்களுக்குக் கூட தெரியாதென இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், நியமனத்தின் பின்னர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரனின் மனைவி சுமனா பிரேமச்சந்திர அதிகாரபூர்வமாக கையொப்பமிட்டு அனுப்பிய கடிதம் ஒன்றினையும் இவ்வூடகம் வெளியிட்டுள்ளது.

இக்கடிதம் அவரின் நியமனத்தை (23ஆம் பக்கம் பார்க்க)

## சிலை உடைப்பு சம்பவம் முழு விசாரணைக்கு உத்தரவு

மட்டக்களப்பு நகரில் முக்கியமான உருவச் சிலைகள் சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உடனடியாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரை வெளிவிவகார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

இச்சிலைகள் சேதமாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர்கள் மற்றும் அத்தகையவர்களின் நோக்கம் என்பன குறித்து கண்டறியுமாறும் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார (23ஆம் பக்கம் பார்க்க)

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog — Sri Lanka Telecom — airtel — etisalat — Sri Lanka Telecom Mobitel We Care. Always. — (CEB) — WESTERN UNION MONEY TRANSFER — HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள

சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். — ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். — சுன்னாகம் — மானிப்பாய் — நெல்லியடி — சாவகச்சேரி — கிளிநொச்சி — சங்கானை

SINGER EXPRESS PAY

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ 1973-ல் பிறந்த உள்ளூர் ஆட்சி மன்றத்தில் வேலைபார்க்கும் மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. நட்சத்திரம் பூரட்டாதி கிரகபாவம் 18

யாழ்.இந்து கௌரவ 1975 ஆண்டு ஆரம்பத்தில் பிறந்த பூசம் நட்சத்திரம் 10 கிரக பாவம் உடைய லண்டன்PR உள்ள மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. மணமகன் தற்போது வந்துள்ளார்.

யாழ்.இந்து கௌரவ 1988 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு அசைவ போசன மணமகள் தேவை.

மண மகன் உயர்கல்வி கற்பதற்கு லண்டன் சென்றுள்ளார். நட்சத்திரம் சதயம்.

லண்டன்PR உள்ள மணமகள் தேவை.

தொடர்புக்கு: 078 3017290
077 4232836
ஞாயிறு தவிர 021 321 2961 (சி-6286)


## ஈவினையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள், உடைகள் என்பனவற்றை திருடிச்சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று ஈவினை மத்தியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் நேற்று காலை 9 மணியளவில் வீட்டினை விட்டு வெளியேயுள்ள நிலையில் ஓட்டினைப்பிரித்துக் கொண்டு உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 5 பவுண் தங்க நகை மற்றும் டி.வி.டி பிளேயர், இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் புதிய ஆடைகள் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் பிற்பகல் 3 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்த போது பொருட்கள் திருடப்பட்டுள்ளது தெரியவந்தது.

இந்தச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-6)

## தவிசாளரின் வீட்டிற்கு விஷமிகளால் கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி - தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் பொன்னையா லியாகேசின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்கள் கல்வீச்சு நடத்தியுள்ளனர்.

அதேவேளை அவரின் வீட்டு வாசலில் மலர்வளையம் ஒன்று வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-8)

## பொருளாதாரத் தடை...

நாடுகளையும் கடுமையாகச் சாடி வருகின்றது.

சிறிய நாடு ஒன்று ஐ.நா. தீர்மானத்தை கொச்சைப்படுத்தும் வகையில் செயற்படுவது அவ்வளவு நல்லதல்ல என்ற அடிப்படையிலும்,

அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தமைக்காக, இந்தியாவுக்கு எதிராக சீனாவுடன் நெருங்கிய தொடர்பை வலுப்படுத்த இலங்கை அரசு முயற்சிப்பதையும் அடுத்து,

இலங்கை மீது பொருளாதாரத்தடையை விதிக்க அமெரிக்கா உத்தேசித்துள்ளதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை விதிப்பதன் மூலம் இலங்கை மக்கள் தற்போது உள்ள ஆட்சியை மாற்றி அமைக்க முற்படுவர் என கருதப்படுவதாகவும்,

எந்நேரமும் பொருளாதாரத் தடைபற்றிய அறிவித்தல் வெளியாகலாம் என்பதால் இலங்கை அரசு தனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என இராஜதந்திரிகள் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ந-8)

## இனப்பிரச்சினை...

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை ஜனாதிபதியே நியமித்தார்.

அந்தக்குழுவும் ஜனாதிபதியிடமே அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை அரசாங்கமே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அப்படியாயின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் அரசாங்கம் தற்போது குறை கூறுவது ஏன்? நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல விடயங்கள் உள்ளன. ஆனால், தேசிய இனப்பிரச்சினைக்கு தெளிவானதொரு தீர்வுத் திட்டம் இல்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை காணாமல் அதை அப்படியே கைவிடுவதற்குத்தான் அரசாங்கம் தெரிவுக் குழு விடயத்தில் துடிதுடித்து நீலிக் கண்ணீர் வடிக்கின்றது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இதற்கு முன்னரும் எத்தனை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவற்றால் கண்ட பயன்தான் என்ன? காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியமே தெரிவுக்குழு.

இனப்பிரச்சினைக்கு மகிந்த அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் என்ன என்பதை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். மகிந்த அரசாங்கம் வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி, அங்கு வாழும் மக்கள் எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வை வழங்கினால் தமிழ் மக்கள் தனிஈழத்தை கோரப் போவதில்லை.

மகிந்த அரசாங்கம் காலத்தைக் கடத்தாமல் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடி பணிந்தே மகிந்த அரசாங்கம் கடன் பெற இணங்கியுள்ளது. மாறாக மகிந்த அரசாங்கம் இது விடயம் தொடர்பில் கூறும் கதையெல்லாம் அப்பட்டமான பொய்யாகும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரி வித்துள்ளார். (ந-8)


ஹறிஸ் மா அல்பம்
(30 சீற் அல்பம் கட்டுவதற்கு)
10x30 - 15, 000
12x30 - 20,000/=
VIDEO - 20, 000/=
(Z 5 HD CAMERA)
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P. : 0212221358

### சேவை முகவர்
### காணிகள், வீடு விற்பனைக்கு

யாழ். கச்சேரி A9 5பரப்பு, பலாலி வீதி 3 1/2, மணல்தறை லேன், நுணாவில் தென்னந்தோட்டம் 21 பரப்பு, யாழ்.நல்லூரில் விற்கவிரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்

V. சுந்தரம் 0774819801 (C-6310)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

### கட்டிடம் வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் தட்டா தெரு சந்திக்கருகில் 6 அறைகள் கொண்ட மாடி (3000 சதுரஅடியளவில்) அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களும் அலுவலகமாக, களஞ்சியமாக பாவிக்கக் கூடியது.

தொடர்பு:- 0777 150931 (8106)

### தவறிவிட்டது

மாரிமுத்து தவராசா என்பவருடைய தே.அ.அ. இலக்கம் 571723786V, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் சென்ற பஸ்ஸில் தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்திற்கோ அல்லது 0752431242 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்பு கொள்ளவும். (C-6298)

### Dhamma Rashmi Centre (Jaffna)
வேலையாட்கள் தேவை (ஆண்களும் பெண்களும்)

எங்களிடம் வீட்டுத்தாதிகள், ஆஸ்பத்திரி தாதிகள் உள்ளனர். தாதிகளுக்கு புதிதாக ஆட்கள் சேர்க்கப்படுவார்கள். அம்புலன்ஸ் வசதிகளுடன் நோயாளியை யாழ் - கொழும்பு, கொழும்பு - யாழ் வைத்தியசாலைகளில் (தனியார்) சேர்த்துக் கவனித்துக் கொடுக்கப்படும்.

கட்டுமாணப் பணிகளுக்கு ஆட்கள் தேவை

(மேசன், கூலியாட்கள், பெயின்ரர், தச்சுத் தொழிலாளி) தங்களது தகைமைகளுடன் கூடிய விபரக் கோவையை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பவும்.

சுழிபுரம் மத்தி
சுழிபுரம்.

தொடர்புக்கு :- 077 3301041, 021 491 4633 (8110)


## நவநீதம்பிள்ளையின்...

ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் மாதங்களில் இலங்கைக்கு விஜயம் செய்வதென நவநீதம்பிள்ளை திட்டமிட்டிருந்தார்.

இலங்கை விஜயத்திற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் திட்டத்தை, அரசாங்கம் நிராகரித்துள்ளமையே, இவரின் விஜயம் இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா.பிரதிநிதிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் வரையில் தமது விஜயத்தை தொடரப் போவதில்லை என நவநீதம்பிள்ளை தீர்மானித்துள்ளார் என குறித்த கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (ந-8)

## வாகனங்களின் தலைகள் வெட்டப்படுகின்றன

ஒரே நாளில் இரண்டு இந்து ஆலயங்களில் சுவாமி காவப்படும் வாகனங்களின் தலைகள் அரிவாளால் அறுக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கோப்பாய் பிரான்பற்று பிள்ளையார் கோவிலிலும், அச்செழுவில் உள்ள ஆலயமொன்றிலும் இடம்பெற்றுள்ளது.

அரியப்பட்ட வாகனங்களின் தலைகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)


Batch - 4

யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக
UNI ICT Campus வழங்கும்
கீழ்வரும் உயர் மருத்துவ பட்டப்படிப்பு மற்றும் ஹோட்டல் நிர்வாக கற்கைநெறிகள் யாழ் மாவட்டத்தில் ஆரம்பம் !!!

**HND in MLT (Medical Laboratory Technology)**
Study Modules :-
* Chemical Pathology
* Parasitology
* Microbiology
* Blood Bank Serology
* ICT Training
* Anatomy & Physiology
* Hisopathology
* Haematology
* Laboratory Management
* Laboratory Management
* Practical & Internship

Admission Criteria :- G.C.E.A/L Pass in Chemistry or Equivalent qualification. Durations - 18 Months.

**HND in Radiography (X - Ray Technology)**
Study Modules :-
* Medical English
* Anatomy, Physilogy
* X ray Production
* General Radiation
* Radiation Protection
* Equipments
* Radiography Techniques
* Imaging
* Diagnostic Radiography
* Imaging process ECG
* ICT Training
* Practical & Internship

Admission Criteria :- G.C.E.A/L Pass in Physics or Equivalent qualification. Durations - 18 Months.

**HND in Physiotherapy**
Study Modules :-
* Musculo- skeletal system
* Anatomy, Physilogy
* Kinesiotherapy
* Fractures and Splints
* Manipulative Procedure
* Clinical Scenarios in Physiotherapy
* Physical Education & Instrumental Physiotherapy
* Psychological aspects of patient care
* Electrotherapy, Actinotheraphy & Hydrotherapy
* Techniques of examination regarding patients
* Practical & Internship

Admission Criteria :- G.C.E.A/L Pass in Bilogy or Equivalent qualification. Durations - 18 Months.

**HND in Pharmacy**
மருந்துக் கலவையாளர் பட்டப்படிப்பு
Study Modules :-
* Forensic Pharmacy
* Pharmaceutics
* Human Anatomy
* Pharmacology
* Pharmacognosy
* Pharmaceutical management
* Pharmaceutical Ethics
* Pharmaceutical Marketing
* Practicals and Internship
* Chemistry

Admission Criteria :- G.C.E.A/L Pass or Equivalent qualification. Durations - 18 Months.

**Dip.Medical Science (Foundation Level)**
Study Modules :-
* Bio physics
* Physical chemistry
* Organic chemistry
* Bio Chemistry
* Human Biology
* Medical English

100% ...

Admission Criteria :- G.C.E.O/L Pass or Equivalent qualification.

**HND in Nursing**
தாதியர் பட்டப்படிப்பு
Study Modules :-
* Fundamentals of Nursing
* Anatomy, Physilogy
* Health Education
* Microbiology
* History and Trends in Nursing
* Introductory Psychology
* Introductory Sociology
* Nursing ethics
* Pharmacology
* Nutrition and Dietetics
* Pathology
* Practical & Internship

Admission Criteria :- G.C.E.O/L Pass or Equivalent qualification. Durations - 18 Months.

ஹோட்டல் நிர்வாக பட்டப்படிப்புக்கள்
Diploma in Hotel Management
Ad/Diploma in Hotel Management
Ad/Diploma in Tourism Management
(உங்கள் பதிவுகளுக்கான இறுதி திகதி :- 15/04/2012)

DIPLOMA IN HUMAN RESOURCE MANAGEMENT
HIGHER/GRADUATE DIPLOMA IN BUSINESS MANAGEMENT

முக்கிய குறிப்பு :- திறமையான மாணவர்களுக்கு எமது நிறுவனத்தின் ஊடாக உரிய தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்!!!

Our International Affiliations :-
abe, City & Guilds, CTH, ETS, TOEFL, BCS, BRITISH COUNCIL, edexcel

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் :- UNI - ICT Campus (PVT) LTD
No :83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P : 021 321 6433 / 0777 110 862 (Branch :- Manipay)

# யாழ். போதனா வைத்தியசாலையில் இரு பெண்களுக்கு இடையே கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண்ணொருவருக்கும் நோயாளரை பார்வையிட வந்த பெண் ஒருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மதியம் யாழ்.போதனா வைத்திய சாலையில் இரண்டாம் இலக்க நோயாளர் தங்குமிட விடுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியருவதாவது,

மேற்குறிப்பிடப்பட்ட விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள நோயாளர் ஒருவரை பார்வையிடுவதற்கு மூன்று பெண்கள் வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளனர்.

மதிய உணவு கொடுப்பதற்காக வருகை தந்த இந்த மூன்று பெண்களும் நோயாளரை பார்வையிடுவதற்கென ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்த பின்பும் விடுதியினுள் தங்கி நின்றுள்ளனர்.

இதனால் அந்த விடுதியில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தாதிய உத்தியோகத்தர் குறித்த மூவரில் இருவரை விடுதியை விட்டு வெளியேற்றுமாறு அவ்விடத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண்ணிடம் கூறியுள்ளார்.

இதற்கமைய குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் விடுதியில் நோயாளரை பார்வையிடுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு பின்பும் நின்ற பெண்களை வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

இருந்தும் விடுதியில் நின்ற மூன்று பெண்களும் வைத்தியர் ஒருவரின் அனுமதி பெற்றே தாம் விடுதியில் நிற்பதாகவும் கூறியுள்ளனர்.

இருப்பினும் தாதிய உத்தியோகத்தர் மூவரையும் வெளியேற்றுமாறு பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு பணித்துள்ளார்.

இதனால் பாதுகாப்பு உத்தியோகத்தர் நோயாளரை பார்வையிட வந்த பெண்களை அவ்விடுதியிலிருந்து வெளியேற்ற முற்பட்டார்.

இதன்போது பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையிலிருந்த பெண்ணை நோயாளரை பார்வையிட வந்த பெண் தாக்கினார். பதிலுக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பெண்ணும் தாக்கினார். இதனால் யாழ். போதனா வைத்தியசாலையின் இரண்டாம் இலக்க விடுதியில் நேற்று சில மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

அத்தோடு இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் கைகலப்பில் ஈடுபட்ட இருவரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டதோடு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண் உத்தியோகத்தரைத் தாக்கிய பெண்ணை மன்னிப்புக் கோருமாறு கூறியதோடு இனிமேல் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடக் கூடாது எனவும் எச்சரிக்கை விடுத்தனர். (அ-6)

## பொ.அபி.அமைச்சினால் வாழ்வாதார உதவிகள்

(சாவகச்சேரி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் இவ்வருடம் நடைமுறைப் படுத்தப்படவுள்ள வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் கிராம மட்டங்களின் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பிரதேச கால்நடை வைத்தியர் பிரிவில் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு 100 வீத மானிய அடிப்படையில் ஒருமாத கோழிக் குஞ்சுகளும் 50 வீத மானிய அடிப்படையில் ஆடுகளும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ். மாவட்ட பயனாளிகளுக்கு 200 கோழிக்குஞ்சுகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

## தட்டுவன் கொட்டி கிழக்கில் மண்அகழ்வு

(ஆனையிறவு)

தட்டுவன் கொட்டி கிராமத்தின் கிழக்கு பகுதியில் உள்ள நாயாறு, கோடைபிட்டியாறு ஆகியவற்றில் மண்அகழ்வு இடம்பெறுகின்றது.

இவ் மண்அகழ்வு பரந்தன், முரசுமோட்டை ஊரியன் ஆகிய பகுதிகளை சேர்ந்த உழவு இயந்திர உரிமையாளர்களாலேயே இரவு பகலாக இடம்பெறுகின்றது.

இதனால் அப்பகுதி வீதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. எனவே உரிய தரப்பினர் இவ் மண் அகழ்தலை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

## வாரம் ஒரு தகவல்

## உபசரிப்பு

"இந்தக் காலத்திலே உங்களைப் போன்ற மனிதர்களைப் பார்ப்பது மிகவும் அபூர்வம் சேர்!"

"ஏன் அப்பபடிச் சொல்கிறீர்கள்?"

"எப்பொழுது உங்களுடைய வீட்டிற்கு வந்தாலும் ஏதாவது கொடுத்து சாப்பிடச் சொல்வீர்கள்...! இந்த அளவிற்கு அன்பு செலுத்த யாரினால் முடியும்? இப்பொழுது எனக்கு கபீர்தாசர் தான் ஞாபகத்திற்கு வருகிறார்!"

"ஏன்?"

"ஒருநாள் கபீர்தாசர் ஒரு ரொட்டித் துண்டையும் ஒரு கிண்ணத்திலே சிறிதளவு நெய்யையும் வைத்துக்கொண்டு சாப்பிடத் தொடங்குகின்ற நேரத்திலே ஒரு நாய் அங்கே வந்து ரொட்டியைக் கௌவிக்கொண்டு போய் விட்டது!"

"அதன் பின்னர்?"

"கபீர்தாசர் கொஞ்சமும் தயங்காமல் நெய் கிண்ணத்தை கையிலே எடுத்துக்கொண்டு அந்த நாயை பின் தொடர்ந்து போய், 'பகவானே! ரொட்டித்துண்டு காய்ந்து இருக்கின்றது... நெய் இல்லாமல் சாப்பிட்டால் ருசியாக இருக்காது... தயவு செய்து இந்த நெய்யையும் சேர்த்து சாப்பிட வேண்டும்' என்று கூறி அந்த நாய்க்கு அதை ஊட்டி விட்டு தான் பட்டினியாகவே இருந்து விட்டார். அவரது ஞான முதிர்ச்சியாலே நாயும் கடவுளாக தெரிந்திருக்கின்றது!"

"அந்த அளவிற்கு ஞான முதிர்ச்சியெல்லாம் எங்களுக்குக் கிடைக்காது சேர்!"

"உங்களுக்கு தன்னடக்கம் அதிகம்... அதனலேதான் அப்படிச் சொல்கிறீர்கள்! அதனாலே எதையும் துல்லியமாகப் புரிந்து கொள்கின்றேன்! உங்களை மாதிரி உபசரிக்கிறவர்கள் அன்பாக எதனைக் கொடுத்தாலும் அது எனக்குத் தேவாமிர்தமாகத்தான் இருக்கும்!"

"அப்படியா செல்கிறீர்கள்?"

"ஆமாம்! இப்பொழுது கூட பாருங்கள்... இதோ நீங்கள் உங்கள் கையினால் கொடுத்திருக்கின்ற இந்த தண்ணீர் கூட எனக்கு சுவையான பானமாகத்தான் தோன்றுகின்றது சேர்!"

"அது இனிப்பான, சுவையான பானம்தான்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

08.04.2012

(பங்குனி 26, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
துதியை முன்னிரவு 9.02 மணிவரை
சுவாதி முன்னிரவு 10.23 மணிவரை
இராகுகாலம் 4.37-6.07 மணிவரை
சுபநேரம் 9.07-10.37 மணிவரை
காரைக்கால் அம்மையார் குருபூசை.

**மேடம்** புகழ் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், சான்றோர் சந்திப்புண்டு, தெய்வ நம்பிக்கை கூடும், விருப்பங்கள் நிறைவேறும் நாள்.

**இடபம்** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மிதுனம்** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள், தொழில் முன்னேற்றமுண்டு, முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திப்பீர்கள், இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**கடகம்** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்ய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனதில் நீண்ட காலமாக இருந்த பாசம் குறையும், வாகன சுகமுண்டு.

**சிங்கம்** ஆதாயங்கள் அதிகரிக்கும் நாள், சகோதர ஒற்றுமை பலப்படும், நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், கௌரவமான நாள்.

**கன்னி** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உங்களுக்கு உதவி செய்ய நண்பர்கள் முன்வருவர், வாக்கு மேன்மையுண்டு, இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** சிந்தனை மிகுதியான நாள், பிள்ளைகளுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், பக்கலமாக நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள்.

**தனுசு** தூர தேசத்திலிருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயரும், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** ஆரோக்கியம் சிராகி ஆனந்தமளிக்கும், பக்கபலமாக நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வீண் பழிகள் அகலும், தந்தை வழி உறவில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மீனம்** எதிர்பாராத வகையில் குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 30 |
| தக்காளி | 60 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 |
| கோவா | 10 | 10 |
| கரட் | 50 | 30 |
| பூசணி | 30 | 20 |
| புடோல் | 40 | 25 |
| வாழைக்காய் | 20 | 20 |
| சின்ன வெங்காயம் | 60-70 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 |
| பாகற்காய் | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 |
| கரணைக்கிழங்கு | 70 | -- |
| பயற்றங்காய் | 100 | 50 |
| லீக்ஸ் | 70 | 70 |
| பீற்றூட் | 20 | 20 |
| கறிமிளகாய் | 60 | 60 |
| முருங்கைக்காய் | 350 | 300 |
| போஞ்சி | 40 | 70 |
| கத்தரி தம்புள்ள | 30 | 20 |
| கீரை - 1 பிடி | 20 | 25 |
| தேசிக்காய் | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 |

# தே.இ.சேவை மன்றத்தில் பதவி வெற்றிடங்கள்

(வவுனியா)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வடமாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒரு வருடத்திற்கான பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாகாண அதிகாரி திருமதி எஸ்.விமலேஸ்வரி அறிவித்துள்ளார்.

இதற்கமைய இணைப்பு அதிகாரி ஒருவர், ஐந்து வெளிக்கள உத்தியோகத்தர், கணக்குப் பதியுனர் ஒருவர் ஆகியோர் ஒரு வருடகால அடிப்படையில் தேவையாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மடு, மாந்தை மேற்கு, பூநகரி, கரைதுறைப்பற்று, துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் இருந்து விண்ணப்பிக்கும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எனவே, விண்ணப்பப்படிவங்களை சுய விபரக்கோவையுடன் இணைத்து சான்றிதழ்களின் போட்டோபிரதியடன் இணைத்து எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக மாகாண பணிப்பாளர் , தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வடமாகாண காரியாலயம் , வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# உட்கட்டமைப்பு வேலைகள் இந்திய நிறுவனத்திடம்

யாழ்ப்பாணம் அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கான உட்கட்டமைப்பு நடவடிக்கைகள் இந்திய நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.

இக் கைத்தொழிற்பேட்டையின் நிர்வாக கட்டட நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மின்சாரம், நீர், உள்ளக பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு நடவடிக்கைகளை இந்திய நிறுவனம் மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிய வருகிறது.

அச்சுவேலிகைத்தொழிற்பேட்டை 200 மில்லியன் ரூபா இந்திய நிதியுதவியுடன் நிறுவப்படவுள்ளதுடன் இத்தொகையில் இந்திய அரசாங்கம் 174 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கும் அதேநேரம் 26 மில்லியன் ரூபாவை இலங்கை அரசு செலவு செய்யும்.

இது தொடர்பில் முக்கிய கலந்துரையாடலொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்வோர் சம்பந்தமாகவும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இக்கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்வதற்கு 52 நிறுவனங்கள் ஆர்வம் காட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அரச ஊழியர்களுக்கு ஆக்கத்திறன் போட்டி

இலங்கைக் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் வருடந்தோறும் நடத்தப்படும் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

இப் போட்டிகள் சிறுகதை, பாடல், கவிதை, சிறுவர் கதை, குறு நாடகம், சித்திரம் ஆகிய துறைகளுக்கு நடத்தப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் யாழ்ப்பாணப் பிரதேச செயலக எல்லைக்கு ட்பட்ட அரச ஊழியர்கள் அனைவரும் யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசார பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்றுத் தங்களது சுய ஆக்கங்களை திணைக்கள தலைவரின் விதந்துரைப்புடன் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேசச் செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

# கடலில் குளிக்கச் சென்ற இளைஞனை காணவில்லை

(கொழும்பு)

காலி தல்பே பிரதேசத்தில் கடலில் மூழ்கி ஒருவர் காணாமற்போயுள்ளார். குறித்த பிரதேசத்தின் ஹோட்டல் ஒன்றில் இடம்பெ ற்றபிறந்ததின வைபவத்தில் கலந்து கொண்ட சிலர் கடலில் குளிக்கச் சென்றிருந்ததாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மூவர் கடல் அலையில் அள் ளுண்டு செல்லப்பட்டதா கவும் அதிலிருந்து இருவர் காப்பாற்றப்ப ட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடல் அலையின் தாக்கம் அதிகரித்துள்ளதால் காணா மற் போன வரை தேடும் பணிகளுக்கு தடையேற் பட்டுள் ளதாக குறிப் பிடுகிறார். காலி மிலித்துவ பிரதே சத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளை ஞனே காணா மற் போயுள்ளார். (அ-2)




நலிவுற்ற மாணவர்களின் மேம்பாட்டிற்கு உதவும் முகமாக யாழ். எயிட் நிறுவனத்தினால் நாவாந்துறை நித்திய ஒளி முன்பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களுடன் முன்பள்ளி மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# ஏ9 வீதியில் வாகன விபத்து

கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி வந்த ஹயஸ் வாகனம் மின்கம்பங்களை ஏற்றியபடி நின்ற கன்ரர் வாகனத்துடன் மோதிய விபத்தில் ஹயஸ் வாகனத்தில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு பழைய திருமுறிகண்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வேலும்மயிலும் ஞானகுரு (வயது 61) என்பரே படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-3-259)

**St. Johnn's College, Jaffna.**

**Announcement**

All the Tutorial & Non -Tutorial staff, Members of the Prefect body, the Scout Troop, the Sea Scout Troop, Members of the Junior Band, and the students are requested to assemble at the college on Monday 9th April 2012 at 8.30 a.m. to attend the funeral service of our staff Late Mr. T.Robert.

PRINCIPAL
St.John's college, Jaffna.

(C-6302)

**மனோதத்துவ வைத்தியம்**

*(General Psychotheraphy)*

**பிரபல மனோதத்துவ நிபுணர்**

**Dr.P. ஆறுமுகம்**

**T.P.: 0719315664 , 0777569205, 0214922403**

**மீண்டும் யாழில்**

**04.04.2012 முதல் 09.04.2012 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள் ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன் (பழைய கமால் லொஜ்)
392/A மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.
சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்

(C-6304)

**பிள்ளையார் இன் A தரம் உல்லாசப் பயணிகள் தங்குமிடம்(An "A" Grade Hotel Approved by the ceylon Tourist Board)**

★Room Boys
★ Cooks

மேற்படி வேலைகளுக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இன்றும் நாளையும் நேரில் வரவும்.

பொது முகாமையாளர் பிள்ளையார் இன்,
31 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(8128)

தொலைபேசி:-021 222 2829
அலை பேசி:0776512333
தொலை நகல்:021 2224149
Email:pillaiyar.in@gmail.com
Wed:pillaiyarinn.com

# வாகன வரி அதிகரிப்பிற்கு காரணம்தான் என்னவோ?

## விளக்கம் கோருகிறது ம.வி.முன்னணி

(கொழும்பு)

வாகனங்கள் மீதான வரி அதிகரிக்கப் பட்டமைக்கான காரணங்களை உரியமுறை யில் தெளிவுபடுத்துமாறு நிதி அமைச்சின் செயலாளரிடம் மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் அதிகரிக்கப்பட்ட வரிகள் எத்தகைய தாக்கத்தை செலுத்தும் என்ப தையும் இதன் தாக்கத்த்தை எதிர்நோக்க நேரிடும் தரப்பினர் தொடர்பாகவும் விளக்க மளிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதி நிறுவனங்களுக்கு முற்பணம் செலுத்தியவர்கள், வர்கனங்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தவர்களுக்கு, வாகனங்களுக்கு விண் ணப்பித்து அவை கப்பல்களுக்கு ஏற்றப்பட்டு ள்ளவர்களுக்கு ஏற்கனவே துறைமுகத்தை வந்தடைந்துள்ள வாகனங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர் களுக்கு இந்த வரி அதிகரிப்பு எத்தகைய தாக்கத்தை செலுத்தும் என பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக உரிய விளக்கம் இது வரை வழங்கப்படவில்லை என்பதால் அதிக விலைகளுக்கு வாகனங்களை விற்பனை செய்து வாகன கொள்வனவாளர்களை ஏமா ற்றி பணத்தை மோசடி செய்யும் நடவடிக்கை யையும் காண முடிவதாக அவர் குறிப்பிடு கிறார்.

வரையறையற்ற முறையில் வரிகள் விதி க்கப்படுவதால் மக்களும் வர்த்தக சமூகத் தினரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள் ளதாகவும் அதிகரிக்கப்பட்ட வரியின் தாக்கம் தொடர்பில் உரிய தெளிவின்மையால் மக்கள் சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

இந்நிலையில் வாகனங்கள் மீதான வரி அதிகரிக்கப்பட்டமை ஒவ்வொரு தரப்பினருக் கும் எத்தகைய தாக்கத்தை செலுத்தும் என் பதை தனித்தனியாக தெளிவுபடுத்துமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# புத்தாண்டு கலை விழா

சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கமும் மானிப்பாய் பொலி ஸாரும் இணைந்து சித்திரை புத்தாண்டு கலைவிழாவினை எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் , சிறுவர், பெரியோர் மற்றும் பெண் களுக்கான விளையாட்டுக்கள் என்பன வும் இரவு இன்னிசைக் கச்சேரியும் நடை பெறவுள்ளன.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போட்டியாளர்கள் சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு செயலாளர் செ.குமாரசிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# மாலைதீவுக்கு விரைகிறார் வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உள் ளிட்ட இலங்கைக் குழுவொன்று மாலைதீவி ற்கு விஜயம் செய்துள்ளது.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் பாது காப்பு அமைச்சர் மற்றும் உள்துறை அமைச் சர் ஆகியோருடன் அமைச்சர் பீரிஸ் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

மாலைதீவின் ஜனாதிபதி மொஹமட் வா ஹீட்டையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேர வையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது இலங்கைக்கு ஆதர வாக மாலைதீவு வாக்களித்தமை குறிப்பிடத் தக்கது. (அ-2)

# என்னே! மதிகெட்டோரின் ஈனச் செயல்கள்!!

## அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம்

உலகம் எங்கனும் போற்றப்படும் அகிம் சாமூர்த்தி மகாத்மா காந்தி, கிழக்கிலங்கையில் பிறந்து அகிலமெங்கும் ஆன்மீக ஒளி பரப் பிய சுவாமி விபுலானந்தர், கிழக்கிலங்கை யின் இன்னுமொரு தவப்புதல்வன் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை மற்றும் அகில மெல்லாம் சமூக நலன் பேணித் தொண்டா ற்றிய சாரணர் இயக்கத்தினர் தந்தையெனப் போற்றப்படுகின்ற பேடன் பவல் பிரபு ஆகி யோரின் சிலைகள் தமிழும் சைவமும் என் றும் அழியாது வாழும் மட்டக்களப்பு புனித பூமியில் இரவோடிரவாக உடைத்துச் சேத மாக்கப்பட்டதை அறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் பேரதிர்ச்சியும் வேதனை யும் அடைகிறது என அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டன அறிக்கையில் குறிப்பிட் டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ள விடயம் வருமாறு,

எமது கலாசார பின்னணியில் வளர்ந்த வர்கள் இவ்வாறான ஈனச் செயல்களில் ஒரு போதும் ஈடுபடமாட்டார்கள்.

இந்த ஈனச் செயல்கள் அரங்கேற்றப் பட்டதை அறிந்து கிழக்கிலங்கை மக்கள் பலரும் எம்மைத் தொடர்பு கொண்டு தமது வருத்தங்களைத் தெரிவித்த வண்ணமுள் ளனர்.

தமிழ் மக்களை புண்படுத்தும் இவ்வா றான கேடுகேட்ட செயல்களை புரிந்தவர்கள் உடனடியாக அடையாளம் காணப்பட்டு நீதி யின் முன்னிறுத்த சம்பந்தப்பட்டோர் நடவடி க்கை எடுக்க வேண்டும் என்பதே எமது வேண் டுகோள். மீண்டும் இவை போன்ற சம்பவங் கள் நடைபெறாதிருக்க அரசு உறுதிமொழி அளிக்க வேண்டும்.

சேதமாக்கப்பட்ட சிலைகளை புதுமெரு கூட்டி மீண்டும் அதே இடங்களில் நிறுவ எம் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுப்போமென அகில இலங்கை இந்து மாம ன்றம் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றது என்றுள்ளது. (அ)

# மஹா கும்பாபிஷேகம்

(வறக்காபொல)

வறக்காபொல அம்புபேபுஸ்ஸ ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மஹாகும் பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரியைகள் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது எனவும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் நடைபெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (அ)


## புதிதாக தொழில் தொடங்க ஓர் அரிய சந்தர்ப்பம்

மறுசீரமைக்கப்பட்ட நவீன புகைப்படப்பிரதியாக்கல் இயந்திரங்களை உத்தரவாதத்துடன் பயிற்சியுடனும் பராமரிப்பு சேவையுடனும் நாம் வழங்குகின்றோம்.




(லீசிங் வசதியும் செய்து கொடுக்கப்படும்)

மூர்த்தி லேசர் டிஜிற்ரல் கலர் லாப்
62/17 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



## NEWZELANDஇல் உயர் கல்வி

கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் G.C.E. O/L இல் ஆறு பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் நியூசிலாந்தில் உயர் கல்விகளுக்கு செல்லலாம்.



**தேவையான கல்வித் தகைமைகள்**


G.C.E. O/L ஆறு பாடங்கள் சித்தி
ENGLISH பாடத்தில் சித்தி தேவையில்லை
IELTS பாடநெறி தேவை இல்லை

கட்டணம் முன்பை விட குறைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறைந்த கட்டணத்தில் கல்வியைத் தொடர்வதுடன் படிக்கும் காலத்தில் மாதாந்த சம்பளமாக 1000 டொலர்வரை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் Newzeland நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்வதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் Newzeland இல் குடியேற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:-

RAINBOW TRAVELS & TOURS
113,CHATHAM ST
COLOMBO-01
Tel:-0778980652

(சி-6300)



யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் வரதராஜசர்மா ஸ்ரீகாந்தனின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விழா நாயகன் கௌரவிக்கப்பட்டு அவரது பாரியாருடன் மேடையில் நிற்பதையும் அருகில் விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.

# மஹோற்சவம்

ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படுகின்ற புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான நந்தன வருட மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (அ)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



03.04.2012 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் **கல்விமாணி பட்டம்** பெற்ற எமது கல்லூரி ஆசிரியர்

**திருமதி சுலோசனா கெங்காதரன்**

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று பார்போற்றிட வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள்**
**யா/ வட்டு மத்திய கல்லூரி,**
**வட்டுக்கோட்டை.**

(8129)


# பரிந்துரை நடைமுறைகளுக்காக யோசனை முன்வைக்கிறது உறுமய

இலங்கைக்கு எதிரான ஜெனீவா பிரேரணைக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் அரசாங்கத்திடம் நிலையான திட்டமில்லை எனத் தெரிவித்துள்ள அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய இது தொடர்பில் தாம் ஐந்து அம்சத்திட்டங்கள் அடங்கிய யோசனைகளைத் தயாரித்துள்ளதாகவும் இம்முறை இறுதியில் அதனை வெளியிடவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜெனீவாவில அமெரிக்கா எமது நாட்டுக்கு எதிராகப் பிரேணையை நிறைவேற்றியதோடு அதனை அடிப்படையாக வைத்து இன்று எம்மீது பல அழுத்தங்களை பல்வேறு வழிகளில் பிரயோகித்து வருகின்றது. எமது நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளாத தீர்வுகளைத் திணிக்க முயல்கின்றது.

ஆனால், இதற்கு முகம் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் நிலை யான கொள்கை யுடனான திட்டம் எதுவும் இல்லை. எனவே, அரசாங்க த்தின் பங்காளிக் கட்சியான நாம் ஜனநாயகம் நாட்டின் இறைமை பாது காக்கும் நல்லாட்சி, ஒற்றையாட்சியை பாதுகாக்கும் வகையில் யோசனைகளைத் தயாரித்துள் ளோம். இதன் மூலம் அமெரிக்காவின் சவாலை வெற்றி கொள்ள முடியும்.

இந்த யோசனைகள் அடங்கிய அறிக்கை இம் மாத இறுதியில் மகா நாயக்க தேரர்களிடம் கையளித்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவிடமும் கையளிக்கப்படும் என்றும் கூறியுள்ளது. (அ-2)

# விவசாயிகளுக்கான காப்புறுதித்திட்டம்

(ஓமந்தை)

விவசாயிகள் நெற்பயிரையும் கால்நடைகளையும் காப்புறுதி செய்வதால் அழிவு இழப்பு ஏற்படும் போது நன்மை அடைய முடியும் என வவுனியா மாவட்ட கமநல காப்புறுதி உத்தியோகத்தர் பூரணச் சந்திரன் வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நெற்செய்கையில ஈடுபடும் விவசாயிகளும் கால்நடை வளர்ப்பில் பயன்பெறும் விவசாயிகளும் பயிரழிவோ அல்லது கால்நடைகள் இழப்போ ஏற்படும் பொழுது அவற்றில் ஏற்படும் நட்டத்திற்கு பின்னர் காப்புறுதி செய்திருந்தால் நன்மையடைய முடியும்.

இதன்படி பெரிய நீர்ப்பாசனத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா அல்லது 25 ஆயிரம் ரூபா சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா அல்லது 25 ஆயிரம் ரூபா நட்ட ஈட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

பெரிய நீர்ப்பாசனத்திற்கு ஒரு ஏக்கருக்கு 500 ரூபா அல்லது ஆயிரத்து 500 ரூபா சிறிய நீர்ப்பாசனத்திற்கு ஒரு ஏக்கருக்கு 625 ரூபாஅல்லது ஆயிரத்து 625 ரூபா காப்புறுதி கட்டணம் செலுத்த வேண்டும்.

அதேபோல் கால்நடைகள் இழப்பிற்கு கால்நடைகளின் பெறுமதிக்கேற்ப காப்புறுதி கட்டணம் செலுத்த வேண்டும்.

மேலும் இது பற்றிய மேலதிக விபரங்களை தங்கள் பகுதி கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெறுக் கொள்வதுடன் நெற்செய்கையாளர்கள் இவ்வாண்டுக்கான சிறு போகத்திற்கு உடனடியாக காப்புறுதி கட்டணத்தை செலுத்தி காப்புறுதி செய்து கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-3-256)


உண்மை நிலை

வெளிநாட்டு வர்த்தகம்



2011இல் வர்த்தகப் பற்றாக்குறை பெருமளவிற்கு விரிவடைந்த போதும் வெளிநாட்டு வர்த்தகம் செழிப்பான பாதையில் பயணித்தது. அதிகரித்துச் செல்லும் பணிகளின் உட்பாய்ச்சல், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் என்பன இப்பற்றாக்குறையினை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த உதவின. 2011இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 10,487 மில்லியனுக்கு 22.4% இனால் அதிகரித்தமைக்கு மேம்பட்ட முதலீட்டுச் சூழல், கவர்ச்சிகரமான விலைகள் மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி என்பன காரணங்களாக இருந்தன. இறக்குமதி மீதான செலவினமும் 2011இல் ஐ.அ.டொலர் 20,230 மில்லியன்களுக்கு 50.4% இனால் அதிகரித்தது. இதற்கு, முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்களுக்கான தொடர்ச்சியான கேள்வியே தூண்டுதலாக அமைந்தது. வெளிநாட்டுக் கடன்களினால் முக்கியமாக நிதியிடப்பட்ட அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களும் முதலீட்டுப் பொருட்களுக்கான கேள்வியை உயர்த்தின. **2012இல் வெளிநாட்டு வர்த்தகம் மேலும் அதிகரிக்குமெனினும் அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் அண்மைய கொள்கை வழிமுறைகள் எமது வர்த்தகப் பற்றாக்குறை மிதமடைவதனையும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறைவடைவதனையும் சென்மதி நிலுவை மிகைக்கு மாறுவதனையும் உறுதிப்படுத்தும்.**

CERTIFIED
CENTRAL BANK OF SRI LANKA

(சி/6259)

வெளிநாட்டிலிருந்தும்

# பணம்

செலான் எம்மிடமிருந்தும்

# பணம்

மற்றும் வெளிநாட்டு சுற்றுலா விமான பயணச் சீட்டு



"இப்போது உலகில் எந்த நாட்டிலிருந்தும் அனுப்பும் பணத்தினை இலகுவாகவும் மற்றும் துரிதமாகவும் பெற்றுக்கொள்வதற்கு செலான் வங்கிக்கு வருகை தாருங்கள்..."
இலங்கை கூடைப்பந்து அணியின் தலைவி தர்ஜினி சிவலிங்கம்

## அது மாத்திரமா

- பாங்கொக் மற்றும் இந்தியா சென்றுவர விமானச்சீட்டுகளை வென்றிடும் வாய்ப்பு
- கொடுக்கல் வாங்கல் செய்யும் அனைவருக்கும் ரூ. 200 பெறுமதியான பண வவுச்சர்
- குறைந்த கட்டணம், பாதுகாப்பான நட்புரீதியான சேவை
- அதிஉயர் நாணய மாற்று வீதம்

மேலதிக தகவல்கள் அருகிலுள்ள செலான் வங்கியில்

துரித அழைப்பு : 0112 452 666

இம்மகத்தான வாய்ப்பு ஏப்ரல் 2ம் திகதி முதல் மே 31ம் திகதிவரை கீழ்காணும் கிளைகளில் மட்டுமே.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | அம்பாறை | களவாஞ்சிக்குடி |
| நெல்லியடி | மட்டக்களப்பு | கந்தளாய் |
| மன்னார் | காத்தான்குடி | |
| கிளிநொச்சி | திருகோணமலை | |
| வவுனியா | செங்கலடி | |
| முல்லைத்தீவு | கல்முனை | |
| சங்கானை | சியம்பலாண்டுவை | |
| சாவகச்சேரி | சம்மாந்துறை | |
| மானிப்பாய் | பொத்துவில் | |

GRACE







*நிபந்தனைகள் அடங்கும்

MoneyGram. Money Transfer

SPEEDCASH NOW

XPRESS MONEY Send now. Receive now.

SEY CASH Money to Sri Lanka

ARY Speed Remit MONEY TRANSFER

AFXFASTREMIT SEND & RECEIVE MONEY INSTANTLY

PLACID EXPRESS Worldwide Money Transmitter

EzRemit

INSTANT CASH GLOBAL MONEY TRANSFER


செலான் டவர்ஸ், இல.90, காலி வீதி, கொழும்பு 03
தொலைபேசி: +94 11 2456789, +94 11 4701000
தொலைநகல்: +94 11 2456456
மின்னஞ்சல் : info@seylan.lk
Brand Finance Rating "A" Fitch Rating: 'A-(lka)'
கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

www.eseylan.com

(சி/6296)


# ஸாந்நித்யத்தை உணர்தல்



கண்ணிருப்பவர்கள் மட்டுமே பார்க்கமுடியும், காதிருப்பவர்கள் மட்டுமே கேட்கமுடியும். எது பார்க்கப்பட வேண்டுமோ, அதைக் கேட்கமுடியாது; பார்க்கத்தான் முடியும். வாழ்க்கைக்கு ஐந்து பரிமாணங்கள் உள்ளன. அல்லது ஐந்து உணர்வுகள் உள்ளன... பார்த்தல், கேட்டல், நுகர்தல், ருசித்தல், தொடுதல். ஆனால், மேலும் ஒரு பரிமாணம் உண்டு- அது நம் பார்வைக்கு அப்பால் போய்விட்டது. அதுதான் ஸாந்நித்தியத்தின் மெய் உணர்வு. ஒளியைக் காதுகளால் கேட்கமுடியாது; கண்களால்தான் பார்க்கமுடியும். ஒலியைக் கண்களால் பார்க்க முடியாது. காதுகளால்தான் கேட்க முடியும். அதுபோல் ஸ்ந்நித்தியத்தை (ஆன்ம உணர்வை) இதயத்தால் தான் உணரமுடியும்.

கடவுள் புலன்களால் உணரக் கூடிய பொருளல்ல. அவர், உணர்வுகளின் உணர்வு, ஸ்ந்நித்தியத்தின் மெய்உணர்வு, மௌனத்தின் ஒலி- வாழ்க்கையின் ஒளி- உலகத்தின் சாராம்சம்- பேரானந்தத்தின் அனுபவம். நமது ஆறாவது அறிவாகிய ஆன்ம உணர்வில் (தன் முழு இருப்பில்) வாழும்போதுதான் மனித வாழ்வு வளம்பெறுகிறது.

நீ மனச் சோர்வுடன் இருந்தால்- சோர்வைத் தொடர்ந்து உணர்ந்தால்- உன்னைச் சுற்றிலும், சோர்வின் அழுத்த அலைகள் உருவாக்குகிறாய். உன்னைச் சுற்றியுள்ள அந்த சோர்வின் மின்துகள்கள் சுற்றுப்புறத்துக்குச் சென்று ஒட்டிக்கொள்கின்றன. யாராவது, அங்கே வந்தால், நீ அந்த இடத்தை விட்டுப்போன பிறகும்கூட, எந்தக் காரணம் இல்லாமலே அவர்கள் சோர்வை உணர்வர். நீ இதை அனுபவித்திருக்கிறாயா? நீ ஓர் அறைக்குள் நுழைந்த உடனேயே சட்டென்று கோப அலைகளை உணர்வாய் சில நிமிடங்களுக்கு முன் நீ நன்றாக இருந்தாய். ஆனால், அங்கு நுழைந்தவுடனேயே, கோபமும், மன அழுத்தமும், இறுக்கமும் உன்னை ஆட்கொள்ளுகிறது.



இன்று சுற்றுப்புற சூழ்நிலையைப் பற்றி நிறைய பேசப்படுகின்றன. சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் எங்கு பார்த்தாலும் பணிபுரிகின்றனர். காடுகளைப்பாதுகாத்தல், பசுமைப்புரட்சி, பொருட்களின் மறுசுழற்சி, பிளாஸ்டிக் உபயோகம். அதிக இயற்கை உரங்களையும், இயற்கையில் கிடைக்கும் பொருட்களையும், உபயோகப்படுத்திக் கொள்ளுதல், நிறைய பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. சில வருடங்களுக்கு முன்வரை இது ஒரு பிரச்சினையாகவே இல்லை. இருந்ததா? இப்போது, எல்லா நாடுகளும், இந்தப் பூமியைப் பாதுகாப்பதைப் பற்றிய ஓர் உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. நாம் பூமியை மாசுபடுத்துவதுபோல, தண்ணீர்ரையும் மாசுபடுத்துகிறோம். நம் உணர்ச்சிகள் உணர்வுகளின் அதிநுட்பமான சூழலையும் மாசுபடுத்து கிறோம்.

மனிதன் சூழ்நிலைக்கு பலியாகி விட்டான். அவன் தன் மனதை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள

ஆன்மீகம் 29

வில்லை. ஆனால், சூழ்நிலைக்குப் பலியாகிவிட்டான். இந்த சுற்றுப்புறத்தின் முழுமையான அழுத்தத்திற்காளாகிவிட்டான். அப்படித்தான் நடக்கிறது. இல்லையா? நம்முடைய எதிர்மறை உணர்வுகளால், நம் சுற்றுப்புறத்தை நுட்பமான வழியில் மாசுபடுத்துகிறோம். ஆனால், அந்தச் சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்த சிறிதுகாலம் பிடிக்கிறது. சில சமயங்கள் மன அழுத்தத்திற்காளாவதும், தீய உணர்வுகளால் பாதிக்கப்படுவதும் இயல்புதான். சந்தேகப்படுவதும்,

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

பலவித உணர்ச்சி மாற்றங்களுக்காளாவதும் தவிர்க்கப்பட முடியாதவை. யாருக்கும் அது பிடிக்கவில்லை; ஆனால், அது நடக்கிறது. அவை நடக்கையில் அவற்றை எப்படி கையாளுகிறோம்? நாம் பல விடயங்களைக் கேட்பதற்குக் குறைந்தநேரமே செலவழிக்கிறோம்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 29

## சுக்கிரமேட்டிலுள்ள இரேகைக் குறிகளின் பலாபலன்கள்

கட்டை விரலின் மூன்றாவது அங்குலாஸ்தி சுக்கிரமேடு, ஏழாவது கிரகம். மற்றக்கிரகமேடுகளை விட இது கையில் பெரும்பாகத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது.

1. சுக்கிரமேட்டில் கட்டை விரலின் இரண்டாவது அங்குலாஸ்திக்கருகில் இரண்டு அல்லது மூன்று நீண்ட இரேகைகள் காணப்படில் விசுவாசமற்ற தன்மையைக் காட்டும்.

2. குறுக்கிட்ட இரேகைகள் சுக்கிரமேட்டில் அழுந்திப் பதிந்திருந்தால், வாழ்வில் மிக்க சங்கடப்பட்ட நிலையைக் குறிக்கும். அதாவது, பெறுமதியான பொருளையாவது, மனைவியையாவது இழந்ததால் பதிந்து பள்ளமாக இரேகையிருக்கும்.

**சக்தி**

3. சுக்கிரமேடு சமமான வலைக்குறிகளால் கவர்ந்திருந்தால், பேராசையையும், சித்தி பெறாத் தன்மையையும் காட்டும். சுக்கிரமேடு கடுனமாயிருப் பின் இரக்கமற்றவரெனக் குறிக்கும்.

4. பட்டும்படாத புள்ளி காணப்படில், காதலால் நேர்ந்த நோயைக் குறிக்கும். கறுப்புப்புள்ளி காணப்படில் கெட்ட வியாதியால் வருந்துவதைக் குறிக்கும்.


5. ஒற்றைக் கிராஸ் காணப்படில், ஏகபத்தினி விரதமுள்ளவரென்பதைக் குறிக்கும். குருமேட்டில் சூழக்குறிப்புமிருந்தால் வாழ்வில் ஒற்றுமையைக் காட்டும்.

6. சுக்கிரமேட்டின் மத்தியில் ஒரு நட்சத்திரக்குறியிருந்தால் நெருங்கிய பந்து அல்லது மித்திரர் காலமானதைக் குறிக்கும்.

7. இரண்டாம் அங்குராஸ்திக் கருகில் ஒரு நட்சத்திரக் குறியிருப்பின், வாழ்வு முழுதும் மனைவியால் ஏற்படும் துன்பங்களைக் குறிக்கும். ஒரு ஸ்திரீக்கு இரண்டாம் அங்குலாஸ்தி இணைப்பில் இரட்டைச் சிறு இரேகைகள் மற்றொரு இரேகையால் குறுக்கிட்டிருந்தால் புருஷன் விலக்கி விட்டதைக் குறிக்கும்.

8. சுக்கிரமேட்டின் அடிவாரத்தில் ஒரு நட்சத்திரக்குறி காணப்படில், ஒரு ஸ்திரீயினால் நேர்ந்த துரதிர்ஷ்டத்தைக் குறிக்கும்.

9. புத்திரேகை சந்திரமேட்டில் நீண்டு தொங்கியிருந்தாலும், சுக்கிரமேட்டின் அடிவாரத்தில் ஒரு நட்சத்திரக்குறியிருந்தாலும் பயனற்ற சிந்தனையுள்ளவரென்பதைக் குறிக்கும்.



10. வட்டக் குறி கடுமையான நோயைக் குறிக்கும்.

11. ஆயுள் இரேகைக்கருகில் அடிவாரத்தில் சதுரக்குறியிருந்தால் ஆசாபாசங்களைத் துறந்தவரென்பதைக் காட்டும். ஆனால், மேனாட்டு இரேகை சாஸ்திரிகள் சதுரக் குறி காராக்கிரக வாசத்தைக் குறிப்பதாய் அறிவிக்கின்றனர். இது அனுபவத்துக்குப் பொருந்தவில்லை.

12. முக்கோணக்குறியிருந்தால், ஸ்திரீயாயினும் புருஷராயினும் காதலைக் கணக்கிட்டுப்பார்ப்பார்கள்.

13. விசாலமான வலைக்குறியும் சந்திரமேட்டில் நீண்ட அருள் இரேகையுமிருந்தால், வாழ்வின் எதிர்கால மர்மங்களைக் கனவில் அறிவிக்கும். சங்கல்ப்பங்களுக்கு எல்லாம் தக்க விடையளிக்கும்.

14. நீண்ட தீவுக்குறி விவாகத்துக் குரிய இலாபகரமான நல்ல சந்தர்ப்பம் நழுவ விடப்பட்டதைக் குறிக்கும். சுக்கிரமேடு உயரமாயிருந்தால், சுக்கிராதிக்கம் உள்ளவரெனப்படும். மெல்லிய வலைக் குறி அமையப்பெறின் மிகுந்த சொல்வாக்கைக் குறிக்கும்.

## ரேகைகளும் கிரகங்களும்

(தொடரும்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 94



லெனின்கிராட்-நோவ்கரத் நடவடிக்கையின் பயனாய் 20க்கும் மேற்பட்ட எதிரிடிவிசன்கள் முறியடிக்கப்பட்டன. லெனின்கிராட் நகரத்தின் முற்றுகை முற்றிலுமாக உடைக்கப்பட்டது. கிட்டத்தட்ட லெனின்கிராட் பிராந்தியம் முழுவதும் கலீனின் பிராந்தியத்தின் பகுதியும் விடுவிக்கப்பட்டன. கரேலியா பூசந்தியிலும் பால்டிக் குடியரசு களிலும் எதிரியை முறியடிப்பதற்கு அனு



கூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. லெனின் கிராட் அருகே சோவியத் துருப்புகளின் வெற்றி லெனின்கிராடிற்கு மட்டுமன்றி ஹிட்லர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சோவியத் மக்கள் நடத்திய போராட்டத்தின் போக்கு முழுவதற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

இவ்வெற்றி அயல்நாடுகளிலும் எதிரொலியை ஏற்படுத்தியது. ஸ்டார் என்ற பிரிட்டிஷ் பத்திரிகை அந்நாட்களில் பின்வருமாறு எழுதியது.

"லெனின்கிராட் அருகே ஜேர்மனியர்கள் முறியடிக்கப்பட்டதானது, பாசிசப் பலத்தைக் குன்றச் செய்வதில் எத்தகைய பங்காற்றியுள்ளது என்பது எல்லா சுதந்திர மக்களுக்கும் பாசிஷ்டுகளால் அடிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கும் புரிகிறது. லெனின்கிராட், இன்றைய யுத்தத்தின் வீரத்திருநகர்களில் ஒன்றாக எப்போதோ ஆகி விட்டது. லெனின்கிராட் அருகே நடந்த சமர் ஜேர்மனியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது பாரீஸ், பிரஸ்ஸல்ஸ், ஆம்ஸ்டர்டாம், வார்ஸா, ஒஸ்லோ ஆகிய இடங்களில் தாங்கள் தற்காலிக எஜமானர்கள் மட்டுமே" என்று ஜேர்மனியர்கள் உணருமாறு செய்தது.

"ஆக்கிரமிப்பாளர்களால் நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையிலிலும் தமது நேசத்திற்குரிய நகரத்தை வெற்றிகரமாகப் பாதுகாத்து... இதன் மூலம் சோவித் யூனியனுடைய மக்களின் அச்சமற்ற மனத்திரட்டை வெளிப்படுத்திய நகரத்தின் வீரஞ்செறிந்த போர்வீரர்கள், அதன் விசுவாசம் மிக்க ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் நினைவாய்" அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் 1944 மே மாதம் தன் மக்கள் சார்பாய் லெனின்கிராட் நகரத்துக்கு விசேட நற்சான்றிதழை அனுப்பினார்.

"லெனின்கிராட் நகரத்தின் வீர காவியம் 900 பகல்களும் இரவுகளும் நீடித்தது. பட்டினி, மிருக்த்தனமான விமான குண்டுவீச்சுகள், பீரங்கித் தாக்குதல்கள் ஆகியவற்றால் லெனின்கிராடை நசுக்க பாசிஸ்டுகள் முயன்றனர். இவர்கள் 1இலட்சத்து 7 ஆயிரத்துக்கும் அதிகமான கனவெடி குண்டுகள், எரிகுண்டுகளையும் 1 இலட்சத்து 50 ஆயிரம் பீரங்கிக் குண்டுகளையும் வீசினர். ஆனால், நாடு முழுவதன் உதவியோடு கூட லெனின்கிராட் வாசிகள் எதிர்த்து நின்று வெற்றிபெற்றனர். இவர்கள் காட்டிய உதவியும் வீரமும் சோவியத் மக்கள், போர் வீரர்களின் உயர்வான தார்மீக மனப்பாங்கிற்கும் சோஷலிசத் தாயகத்தின்பால் இவர்களுக்குள்ள விசுவாசத்துக்கும் மிகச்சிறப்பான எடுத்துக்காட்டாகும். பட்டினி, குண்டுகளால் நூறாயிரக்கணக்கான லெனின்கிராட் வாசிகள் இறந்து போனதானது, என்றென்றும் பாசிசத்தின் மிகக் கொடுமையான குற்றங்களில் ஒன்றாக இருக்கும்."

லெனின்கிராட்-நோவ்கரத் நடவடிக்கையின் சிறப்பு அம்சம் என்னவெனில், காடுகளும் சதுப்பு நிலமும் இருந்த இடங்களில் மிதமான பனிக் காலத்தில் எதிரியின் பலமிக்க நீண்ட கால, பல படை வரிசைகளை அடக்கிய தற்காப்பை பிளந்து கொண்டு சென்றதாகும். அரை முற்றுகையிலிருந்த நகரத்திலிருந்தும் கடலோர தாக்குமுனைகளிலிருந்தும் தாக்குதல் தொடுக்க்ப்பட்டது. பொதுவான போர்த்தந்திர கடமையை நிறைவேற்றிய சேனைகள், கடற்படை மற்றும் வளித்தது. கெரில்லாப்படை வீரர்கள் காலாட்படைத் துருப்புகளின் தலைமையகத் திட்டத்திற்கேற்ப எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை அழித்தல், எதிரியின் நிர்வாக உறுப்புக்கள், கிடங்குகள் போன்றவற்றை ஒழித்துக் கட்டுதல் ஆகியவை சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சேனைகளின் பிரதான தாக்குதல் திசைகளில் பலம்மிக்கப்

லெனின்கிராட்டைப் பாதுகாக்கும் பணியில் வீரத்துடனும் அர்ப்பணிப்புடனும் கடமைபுரிந்த 14 இலட்சத்து 96 ஆயிரம் வீரர்கள் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்



லெனின்கிராட்டைப்பாதுகாப்பதற்காக தியாகங்கள்பலசெய்து வீரஞ்செறிந்த போரைச் செய்தவர்களையும் மக்களையும் நினைவுகூறும் நினைவாலயங்கள்







## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

கெரில்லா படைவீரர்களில் கச்சிதமான, பரஸ்பர செயலாக்கம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது, இந்நடவடிக்கையின் விசேட அம்சமாகும்.

கடற்படை துருப்புகளையும் ஆயுதத் தளவாடங்களையும் ஏற்றிச் சென்றது, இராணுவத் தாக்குதலுக்குப் பிரங்கிகளைக் கொண்டு ஆதர படைத் திரட்டுக்களை அமைத்தது, துருப்புகள் பல வரிசைகளில் நிறுத்தப் பட்டிருந்தது, இரண்டாவது படை வரிசைகளைத் திறமையாகப் பயன் படுத்தியது, துருப்புகளை இடையாறாது வழிநடத்தியது ஆகியவை நடவடிக்கையின் வெற்றிக்கு உதவின.

(தொடரும்)

# தமிழ் பாரம்பரிய அரங்கில் புதிய முயற்சி 4

இவர் ஏற்கனவே பல நாடகங்கள் நடித்ததோடு இசை நாடக மூத்த கலைஞன் தைரியநாதனின் மகன் என்பதோடு இவர் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பை மேற்கொண்ட போது நடித்த ஒரு யதார்த்த நாடகத்தில் அவரது நடிப்பிற்காக பெரும் வரவேற்பைபெற்றவர்: சுஜானந்தி (சீதை) -ஏற்கனவே எனக்கு அனுபவம் இருப்பினும் இங்கு எல்லாமே வித்தியாசம் என்றார். இவரும் தைரியநாதனின் மகளாவார். இவர் பாடும்போது அவரது குரல் சபையை வசீகரப்படுத்தும், ஜோசப் மேரி (லட்சுமணன்) "எனது தனிப்பட்ட ஆளுமையை விடுத்து என்னைப் பாத்திரத்தின் ஆளுமைக்கு நெறியாளர் மாற்றி வைத்தார். இராமர் பாத்திரத்திற்கு பொருத்தமாக இலட்சுமணன் பாத்திரத்தை நடித்தவர் உணர்வோடு நடித்திருந்தார். பரதன் பாத்திரமேற்று நடித்த அருமைநாதன் நிலைமைக்கேற்ற உணர்ச்சியை வெளிப்படுத்தினார். கூனியாக நடித்த அர்ச்சனா பாத்திரத் தோற்றப்பொலிவைப் பேணி நின்றார். கிருபாகரனின் (இராவணன்) நடிப்பும் இங்கு முக்கியானது. நான் சும்மா நேரங்களில் மனதிற்குள்தான் செய்ய வேண்டியவற்றை செய்து பார்ப்பது வழக்கம். அதேபோல அனுமன் பாத்திரத்தில் நடிப்பவரோடு கதைத்து இரண்டு பேரும் நடிப்பதில் ஒரு இணைப்பை ஏற்படுத்துவோம். ஒவ்வொருவரையும் பார்த்து நடிக்கும் போதே ஆர்வம் தூண்டடப்படும். இவரது நடிப்பில் சாதாரண மேடை நாடக இராவணனை விடுத்து சற்று வித்தியாசமாக ஆர்ப்பரிப்பை குறைத்து அடக்கமான ஒரு பண்பு வெளிப்பட்டது. வசிட்டரின் (ஞானபாஸ்கரன்) அச்சொட்டான பாத்திர பொருத்தப்பாடும் பக்குவமான மிருதுவான அசைவும் அந்தச் சூழலோடு பொருந்தி இருந்தது. கைகேயி பாத்திரம் தசரதனிடம் வேண்டும்போது வெறுப்புள்ள ஒரு பொம்மையைப்போல தன் நடிப்பை வெளிப்படுத்தினார். திரிசடையின் (பவீனா) இனிமையான தன் குரலால் நடித்தார். முடிவாக மிருதங்க கலைஞர் முருகையா-''புதுராகம் இசையை வாசிப்பதில் இது ஒரு புதுவிதம்" என்றும் குறிப்பிட்டார்.

## கண்டனன் சீதையை

இந்த நாடகம் மூலம் பழைய இசை நாடகத்தின் குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளதோடு பழைய முறைமைச் சிறப்புக்களை வரவேற்று அதேவேளை அவை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதும் இந்த ஆற்றுகையின் உள்ளார்ந்த சாரமாக வெளிப்படுகிறது. சண்முகலிங்கம் குறிப்பிடுவது போல் இப்போதுள்ள இசை நாடக பாரம்பரியத்தின் முரணனியாதெனில் பாரம்பரியக் கலைஞரிடம் ஒழுங்குபடுத்துனர்கள் செல்வதா? அல்லது ஒழுங்குபடுத்துனரிடம் பாரம்பரியக்கலைஞர் செல்வதா? என்கிற இரண்டிலும் இரண்டையும் கையாளலாம் என்பதுதான் இதன் முன்னேற்றத்திற்கான வழிகளாகும்.

கைலாசபதி கலையரங்கில் நிரம்பி வழிந்த பார்வையாளரோடு (சில பார்வையாளர் இடமின்றி திரும்பிச்சென்ற கவலைக்குரிய சம்பவமும் இடம்பெற்றது) நாடகம் நடந்தது. சங்கீத நடனகாரார், இசைநாடக கலைஞர், நாடக ஆர்வலர், பொது ரசிகர் எனப் பலதரப்பட்டோர் காணப்பட்டனர். சிறுவர்களும் ரசிக்கும் அளவிற்கு நாடகம் இருந்தது. இந்நாடகத்திற்கு பலர் நிதியுதவி செய்திருந்தனர். குறிப்பாக அவர்களில் சாரங்கா சிவபாஸ்கரன் போன்றோர் நாடகத்தை வந்து பார்த்து ரசித்தது வரவேற்கத்தக்கது என்பதோடு மேலும் அவர் போன்றோரது பங்களிப்பு கலை வளர்ச்சிக்கு தேவையாகிறது. நாடகம் முடிந்ததும் பார்வையாளர் பட்டென எழுந்திராதது ஒரு நல்ல அறிகுறி.

இந்நாடகம் மேலும் பல இடங்களில் ஆற்றுகை செய்யும் போது கட்டிறுக்கமடையும். சற்று நேரத்தைக் குறைக்கலாமோ என்றும் எழுத்துருவில் சற்று விளக்கத்தை அதிகரித்தல் என்ற சில விமர்சனங்களை சிலர் முன்வைத்தனர். மிகமோசமான ஒலியமைப்பு முறை நாடகத்தை குழப்பியது. காசைக் கொடுத்துச் செய்தாலும் பயனில்லையெனில் மாற்று வழிகளைக் கையாள்வதே சிறப்பானதாகும். சூர்ப்பனகை மூக்கறுபட்ட இடத்தினையும் இராவணன் வேடம் மாறிவரும் இடத்தினையும் சற்றுக் கவனத்தில் எடுக்க வேண்டும். குறிப்பாக இராவணன் பாத்திரத்தின் வேடம் மாறும் இடத்தில் மூன்று நிலைகள் தேவைப்படும்.

1.நடிகன்

2.பாத்திரம்

3.பாத்திரத்தினுள் பாத்திரம்- மிகச் சவாலான இடமாதலால் கவனமெடுத்தல் நன்றாகும்.

றொபேட்டின் மிக இனிமையான இசைப்பாடல்கள் நடிகர்கள் மூலம் பார்வையாளரை கவரும் வகையில் ஆக்கப்பட்டுள்ளதோடு சீதையைக் கண்டவுடன் எவ்வாறு நாடகம் முடித்து வைக்கப்பட்டது என்ற நுட்பமும் அழிவை விட ஆக்கம் எவ்வளவு வலிமையானது என்ற செய்தியும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நெறியாள்கையில் வெளிப்படுகிறது.

மேலும் பல இடங்களில் இந்நாடகம் மேடையேற்றப்பட வேண்டும்.

(முற்றும்)

க.ரதிதரன்

# மண்டியிட்டு சாவதை விடவும் சண்டையிட்டு மடிவது மேல்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியோ ஜெனீவா தீர்மானங்களுக்கு அடிபணிந்தோ நாட்டை காட்டிக்கொடுக்கப் போவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ், சிங்கள உறவை சிதைக்க அமெரிக்காவினதும் இந்தியாவினதும் தலைமையில் சர்வதேசம் செயற்படுகின்றது. எனவே, நாட்டிற்கு எதிரான சர்வதேசத்தின் சூழ்ச்சிகளுக்கு பின்னணியில் உள்நாட்டு துரோகிகள் பலரும் உள்ளனர்.

அதேபோன்று சம்பந்தன் குழுவினர் தேசிய அரசியலில் ஈடுபட வேண்டும். சர்வதேசத்திடம் கோள் சொல்வதால் எவ்விதமான நன்மைகளும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு யுத்தம் மடிவடைந்து தமிழ், சிங்கள புத்தாண்டை இலங்கையில் ஒற்றுமையாக கொண்டாடுகின்றனர். தற்போது நாட்டில் காணப்படும் நிலையான சமாதானம் மற்றும் சுதந்திரம் என்பவற்றை சீரழிக்க சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன. இதன் மூல சூத்திரதாரிகளாக அமெரிக்காவும் இந்தியாவுமே உள்ளன. போலியான போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்று பல்வேறு குற்றச் சாட்டுகளை காரணங்காட்டி அமெரிக்கா இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுகின்றது.

ஜெனீவா பிரேரணையில் இலங்கையை பழிவாங்கும் நோக்கமே உள்ளது. எனவே, மண்டியிட்டு சாவதை விட சண்டையிட்டு மடிவதே மேல். இதற்கு மூவின மக்களும் ஓரணியில் திரள வேண்டும்.

தமிழ் மக்களை பொறுத்த வரையில் உள்நாட்டில் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்கின்றனர். அவர்களின் கலாசாரம் மற்றும் மரபுரிமைகள் என அனைத்தும் பாதுகாக்கப்படுகின்றன. இதற்காக அரசாங்கம் மிகவும் பங்களிப்புடன் செயற்பட்டு வருகின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் தமிழ் மக்களை புறம்தள்ளி விடவில்லை என்பதை அனைவரும் உணர வேண்டும்.

ஆனால், தமிழ், சிங்கள ஒற்றுமையை சீரழிக்க பாரியளவில் முன்னெடுப்புக்களை அந்நிய சக்திகள் மேற்கொள்கின்றன. இதற்கு இடமளிக்கக்கூடாது என்றார்.

(அ-2)

# கையடக்கத்தொலைபேசி பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

பொருளாதாரத்தில் பின்தங்கிய இலங்கையர் மத்தியில் கையடக்க தொலைபேசியின் பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக விவசாயிகள் மற்றும் சிறிய அளவிலான சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கையடக்க தொலைபேசிகளை அதிக அளவில் பயன்படுத்துவதாக அண்மையில் பெறப்பட்ட புள்ளி விபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கையடக்கத்தொலைபேசி பாவிப்பதன் காரணமாக அவர்களின் பிரயாணங்கள் மட்டுப்படுத்தப்படுவதுடன் நேரமும் அதிகளவில் சேமிக்கப்படுவதாக அந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. (அ-2)

# பேச்சுவார்த்தைகளில் மூன்றாம் தரப்பை இணைத்துக்கொள்ள முடியாது- அரசாங்கம்

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளின் போது மூன்றாம் தரப்பினரை இணைத்துக் கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின் போது மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள வேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைபின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அரசாங்கத்திடம் கோரியிருந்தார். எனினும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இவ்வாறான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் எப்போதும் ஆதரவளிக்காது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைவாகக் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக இருதரப்பினரும் பல்வேறு நிபந்தனைகளை விதித்திருப்பதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. (அ-2)

# கலைஞர்களின் விபரங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையினால் **கலாசார மலர்** வெளியிடப்படவுள்ளதாக யாழ். பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

இம்மலரில் யாழ்ப்பாண பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கலைஞர்களது விபரங்கள் உள்ளடக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக மறைந்த கலைஞர்கள் மற்றும் வாழ்கின்ற கலைஞர்களது விபரங்களை யாழ்ப்பாணப் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)







# சிறுவர் அரங்கம்

64

# ரிஷபராஜா




சில நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது! சரக்குகளை ஏந்திய ஒரு வணிகக்கப்பல் வங்கக்கடலில் மெதுவாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. திடீரென எங்கிருந்தோ நூற்றுக் கணக்கான ஓடங்கள் வந்து மின்னல் வேகத்தில் விற்பனைப் பொருட்களை ஒன்றுவிடாமல் கொள்ளையடித்துச் சென்றன. சரக்குக் கப்பலைச் செலுத்தி வந்த மாலுமிகள் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஆங்கிலேயர்கள் தங்கள் கிழக்கிந்திய கம்பனியின் வணிக மையங்களில் ஒன்றாகக் கலிங்கத்தைத் (ஒரிசா) தேர்ந்தெடுத்திருந்தனர். வங்கக்கடலின் வழியாக அவர்களுடைய சரக்குக் கப்பல்கள் இந்தியாவிலிருந்து பொருட்களை எடுத்துக்கொண்டு ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்யக் கொண்டு சென்றன. கிழக்குக் கடற்கரை இராச்சியம் ஒன்றில் ஆட்சி செலுத்தி வந்த கலிங்க மன்னர்களில் ஒருவனுக்கு இவை பிடிக்கவில்லை. ஆகையால் அவன் தன் ஆட்களுக்குப்

## அம்புலி மாமா கதைகள்

பயிற்சி அளித்து அவர்களைக் கடற்கொள்ளைக்காரர்களாக மாற்றி ஆங்கிலேயக் கப்பல்களை நடுக்கடலில் சூறையாடத் தொடங் கினான். தங்களுடைய வியாபாரம் பெரிதும் பாதிக்கப்படுவதை கிழக்கிந்திய கம்பனியி



னால் பொறுக்க முடியவில்லை. ஆகை யால் கலிங்கமன்னனைச் சிறை பிடிக்க நினைத்தனர். ஆனால், அந்த மன்னன் யார் என்று தெரிந்துகொள்ளவே அவர்க ளுக்குப் பல ஆண்டுகள் சென் றன.

கலிங்கத்தில் கடற்கரையருகே பரதீப் என்ற ஒரு அழகான நகரம் இருந்தது. அடர்ந்த காடுகளினால் சூழப்பட்டிருந்த பரதீப் குஜாங்க் இராச்சியத்தின் தலைநகராக விளங்கியது. குஜாங்கின் மன்னனான சந்திரத்வஜன் தான் ஆங்கிலேயர்களின் வியாபாரத்திற்குப் பெருத்த சேதத்தை விளைவித்து வந்தவன். அவனுக்கு ஷாந்த ராஜா (ரிஷபராஜா) என்ற பட்டப் பெயரும் இருந்தது.

அவனுக்கு மட்டுமன்றி அவன் வம்சத்தில் தோன்றிய அனைவருக்குமே அந்தப் பட்டப்பெயர் இருந்தது.அதற்கான ஒரு வரலாறும் உள்ளது.

மன்னருடைய ஆபத்தான நிலையை உணர்ந்த அந்த இளைஞன் சற்றும் அஞ்சாமல் அந்த முரட்டுக்காளையின் கொம்புகளைத் தன் இரு கைகளினாலும் இறுகப் பற்றிக் கொண்டு, அதைத் தன் பலங்கொண்ட மட்டும் தள்ளி விட்டான். அந்த காளை ஒரு புதரில் சென்று விழுந்தது.

அந்தக் காட்சியைத் தன் மாளிகையின் மாடியில் இருந்து கவனித்துக்கொண்டிருந்த பூரி மன்னர் அந்த இளைஞனுடைய அசாதாரணமான துணிச்சலையும், வலிமையையும் கண்டு பிரமித்து அவனுக்கு ஷாந்த ராஜா (ரிஷபராஜா) என்ற பட்டப் பெயரைச் சூட்டினார். குஜாங் மன்னருக்கு சந்ததியில்லை! தன் உயிரைக் காப்பாற்றிய அந்த இளைஞனையே தன் புதல்வனாக தத்து எடுத்து கொண்டார். அவருக்குப் பின்னர், ரிஷபராஜா குஜாங் இராச்சிய மன்னன் ஆனான். அன்று தொடங்கி அவனுடைய சந்ததியினர் அனைவருக்கும் ரிஷபராஜா என்ற பட்டப் பெயர் நிலைத்தது.

அந்த வம்சத்தில் தோன்றியவன் தான் சந்திரத்வஜன்! ஒருவாறாக ஆங்கிலேயர்கள் தங்களுக்குத் தீராத தலைவலியாக இருப்பது சந்திரத்வஜன்தான் என்று கண்டு பிடித்தனர். அன்றுமுதல் அவனை சிறைப்பிடிக்கப் பல முயற்சிகளைத் தொடந்து செய்து வந்தனர்.

சந்திரத்வஜன் ஆன்மீகத்திலும் நாட்டமுடையவனாக இருந்தான். அதிகாலையிலும் இரவினிலும் அவன் அடர்ந்த காட்டினில் தனியே அமர்ந்து பல மணி நேரங்கள் தியானத்தில் செலவிடுவதுண்டு. அவன் எங்கு சென்று தனியாக தியானம் செய்கிறான் என்பது அவனுடைய நெருங்கிய நண்பர்களில் சிலருக்கு மட்டுமே தெரியும்.

ஆனால், அவனுடைய நண்பர்களில் ஒருவனே அவனுக்கு நம்பிக்கை துரோகம் செய்ய, ஒருநாள் அவன் தனியே அமர்ந்து தியானம் செய்யும் போது, ஆங்கிலேயர்கள் அவனை சிறைப்பிடித்து விட்டனர்.


சந்திரத்வஜனைப் பற்றி, ஆங்கிலேய சரித்திர நிபுணரான டோயன் பீ தனது எஸ்கெட்ச் ஆஃப் ஹிஸ்டரி ஆஃப் ஒரிசா' என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "ஒரிசாவின் மூன்று முக்கிய நகரங்களை நாங் கள் கைப்பற்றினோம். நமது வீரர்களின் அணி மேஜர் போர்ப்ஸ் தலைமை யில் சந்திரத்வஜனைப் பிடிக்க பார் முல் சென்றது. முதலில் சந்திரத்வ ஜன் யாரிடமும் சிக்காமல் தப்பினா லும் பின்னர் அவன் பிடிப்பட்டான். அவன் வசமிருந்த போர்க்கருவிகள் அனைத்தும் ஆங்கிலேயர்களுடை யவை! அவற்றை சந்திரத்வஜன் ஏதா வது உடைந்த கப்பலிலிருந்தோ அல் லது சரக்குக் கப்பலைக் கொள்ளை அடித்தோ பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது".

மகாநதி ஆற்றின் கரையில் அமைந்த பரபட்டி கோட்டையில் சந்திரத்வஜன் சிறைவைக்கப் பட்டான். கட்டக்கில் உள்ள இந்த பரபட்டிக் கோட்டை ஒரு காலத்தில் கலிங்க மன்னர்கள் வசித்து வந்த மாளிகையாக இருந்தது. அங்கு இருந்து தப்பிச் செல்வது மிகவும் கடினம் என்று உணர்ந்தும் சந்திரத் வஜன் அதைப் பற்றி கவலைப் படாமல் அமைதியாக இருந்தான்.

தன்னை சிறை வைத்திருந்த ஆங்கிலேயர்களை பகைவர்கள் என்று கருதாமல், அவர்களுடன் மிகவும் பிரியத்துடன் சந்திரத்வஜன் பழகியதைக் கண்டு, ஆங்கிலேயர்களே வியப்புற்றனர். தனக்குத் தெரிந்த மல் யுத்தக் கலைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தான். நாளடைவில் ஆங்கிலேயர்கள் அவனைத் தங்கள் நண்பனாகவே நினைக்க ஆரம்பித்தனர். ஒருநாள் மாலை நேரத்தில், பரபட்டிக் கோட்டையில் இருந்த ஆங்கிலேய அதிகாரிகள் ஓர் அதியசமான காட்சியைக் கண்டனர். மகாநதி ஆற்றில் கற்பனைக்கு எட்டாத அழகுடன் ஒரு மயில் உருவத்தில் வடிவம் அமைக்கப் பட்டு இருந்த ஓடம் சென்று கொண்டிருந்தது.சிறிது நேரத்தில் அது கரையருகே வர, அதைச் செலுத்திக் கொண்டிருந்த இரு பத்து நான்கு ஆட்கள் தென்பட்டனர். அவர்களுக்கு நடுநாயகமாக ஒரு பெரியவர் வீற்றிருந்தார்.

கரையருகே வந்து அது நின்றதும், ஆங்கிலேயர்கள் அதைச் சூழ்ந்து கொண்டு அதிலிருந்த முதியவரிடம் ஓடத்தைப் பற்றிய விபரங்களைக் கேட்டனர். அதற்கு அவர் அந்த ஓடம் ஒரு செல்வருடையது என்றும், வியாபாரத்தில் அவருக்கு ஏற்பட்ட பெரும் நஷ்டத்தினால் அதை விற்க முயற்சிக்கிறார் என்றும் கூறினார். உடனே அதை விலைக்கு வாங்கத் துடித்த ஆங்கிலேயர்கள் அதனுடைய விலையைக் கேட்டதும் திடுக்கிட்டனர்.

"துரைமார்களே! விலையைக் கேட்டு நீங்கள் தயங்குவது எனக்குப் புரிகிறது. ஆனால் இதன் விலை உண்மையிலேயே



மிக அதிகம். உங்களுக்கு இதன் விலையை மதிப்பிடத் தெரியவில்லை. நான் அதிக விலை கூறுவதாக நீங்கள் சந்தேகப் பட்டால் எங்கள் நாட்டு ஓடங்களைப் பற்றி நன்கு தெரிந்த ஒருவரை அழைத்து வாருங்கள். அவர் இதைப் பார்த்து சரியான விலையை மதிப்பிடட்டும்! என்றார் அந்த முதியவர்.

அவர் கூறிய அந்த யோசனையை ஏற்றுக் கொண்ட பின் ஆங்கிலேயர்கள் யாரை அழைத்து வருவது என்று யோசித்தனர். உடனே அவர்களுக்கு ரிஷபராஜா சந்திரத்வஜன் ஞாபகம் வர அவனை சிறையில் இருந்து உடனே வரவழைத்தனர். விரைவில் அங்கு அழைத்து வரப்பட்ட சந்திரத்வஜன், முதியவரிடம் ஓடத்தைப் பற்றிய விபரங்களை விளக்கமாக நெடு நேரம் கேட்டான். பின்னர், ஓடத்தின் உட்பகுதியை சோதனையிட ஓடத்தில் ஏறி அமர்ந்தான். அதற்குள் மாலை மங்கி இருட்டாகி விட்டது.

திடீரென, கண்ணிமைக்கும் நேரத்தில், சந்திரத்வஜன் ஓடத்தின் உள்ளே அமர்ந்திருக்கும் போதே ஓடம் கிளம்பிவிட்டது. அதிலிருந்து ஆட்கள் அசுர வேகத்தில் துடுப்புப்போட்டு ஓடத்தை செலுத்த, ஆங்கிலேயர்கள் பெருத்த அதிர்ச்சிக்குள்ளாகினர். இவ்வாறு ஆங்கிலேயர்களின் கண்களில் மண்ணைத் தூவி தங்கள் மன்னரை விடுவிக்கத் திட்டமிட்ட அந்த முதியவர் வேறு யாருமில்லை. மன்னருடைய புத்திசாலி மந்திரி பட்டஜோஷிதான்!

# இயேசுநாதரின் வழிகாட்டலின்படி சவால்களை வெற்றிகொள்ள முடியும்

## உயிர்ப்பு ஞாயிறு வாழ்த்துச்செய்தியில் ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டின் முன்னுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு கிறிஸ்து சரிதையின் சிறந்த குணநலப் பண்புகளாகப் பொறுமை, நேர்மைப்பண்பு, தைரியம், மன்னிப்பு வழங்குதல் ஆகியவற்றை நினைவுபடுத்தி மானிட அன்பினால் நிறைந்த சிறப்பான நாட்டைக் கட்டிஎழுப்ப திடசங்கற்பம் பூணுவோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள உயிர்த்த ஞாயிறு பண்டிகை செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் குறிப்பிட்டு இருப்பவை வருமாறு,

உலகின் கிறிஸ்தவ பக்தர்கள் கிறிஸ்து பிரானின் சோக நிகழ்வை நினைவுகூரும் இக்காலத்தில் இலங்கை வாழ் கிறிஸ்து மக்கள் சார்பில் இச்செய்தியை விடுக்கக் கிடைத் தமையைப் பாக்கியமாக கருதுகின்றேன்.

சோகம் ததும்பிய விபூதிப் புதன் கிழமையில் ஆரம்பித்து தொடர்ந்து 40 தினங்கள் பல்வேறு ஆன்மீக பக்திப்பயிற் சிகளில் ஈடுபட்டு கிறிஸ்தவர்கள் காலத்தைச் செலவிடுகின்றனர்.

அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆன்மீக சுகமானது தம்முடைய நாட்டின் சகோதர மக்களிடையேயும் பரப்பப்பட்டு மத, தேசிய சுகவாழ்வு முறையை ஏற்படுத்தி சமாதான நாட்டைக் கட்டியெழுப்பு திடசங்கற்பம் பூண வேண்டுமென்பது எனது எண்ணமாகும். சகலருக்கும் பாஸ்கர பண்டிகை வாழ்த்துகள் உரித்தாகுக என கூறியுள்ளார். (அ-2)

# சீனாவுடன் கலாசார உறவு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் சீனாவுடன் கலாசார உறவுகளை அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக சர்வதேச ஊடக அறிக்கைத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவை வலுப்படுத்த சீன அரசாங்கத்துடன் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க யோசனை ஒன்றை முன்வைத்துள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தத்திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை இலங்கையில் ஒரு சீன கலாசார மையத்தை அமைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

# வணக்கஸ்தலங்களுக்கு சி.எப்.எல். மின்குமிழ்கள்

(கொழும்பு)

மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் திட்டத்தின் கீழ் வணக்கஸ்தலங்களுக்கு சி.எப்.எல். மின்குமிழ்களை வழங்குவதற்கு மின்சக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மின்வெட்டுக்கள் அமுல்படுத்தப்பட்ட யுகம் இருந்தது. அந்த யுகம் மீண்டும் தலைதூக்கவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் வணக்கஸ்தலங்களையும் மின்சாரச் சேமிப்புத் திட்டத்துக்கு பங்காளிகளாக்கவேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையின் மின் உற்பத்தியில் 84 வீதம் எரிபொருளினாலேயே மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு அதிகூடிய செலவு ஏற்படுகிறது. இதேவேளை 2012ஆம் ஆண்டு இறுதியில் சகலருக்கும் வழங்கும் திட்டமும் சமகாலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தும் அமைச்சின் திட்டத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார். (அ-2)

# பிரான்ஸில் கைதான தமிழருக்கு கனடாவில் சட்ட நடவடிக்கை

சன் சீ கப்பலில் 492 தமிழர்களை அகதிகளாக கனடாவுக்கு சட்டவிரோதமாக அனுப்பி வைத்ததாக பிரான்சில் கைது செய்யப்பட்ட தமிழர் ஒருவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படவுள்ளதாக கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

தயாகரன் மார்க்கண்டு என்பவரே கனடாவில் சட்டவிரோத நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இவர் அண்மையில் பிரான் சில் நடத்தப்பட்ட தேடுதல் ஒன்றின் போது கைது செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக கனேடிய சமஸ்டி பொலிஸ் கடந்த மாதம் அனைத்துலக பிடியாண்ணையை பிறப்பித்துள்ளது.

தயாகரன் மார்க்கண்டு தற்போது பிரான்சில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவரை கனடாவிடம் ஒப்படைக்கப்படைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கனடாவின் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விக்ரொவ்ஸ் மற்றும் குடிவரவு அமைச்சர் ஜாசென் கென்னி ஆகியோர் இணைந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளனர். (ந-8-1)

# அமெ.வில் புலிகளின் செயற்பாடுகள் தூதரகங்களை வலுப்படுத்துங்கள்

## தமரா குணநாயகம் வலியுறுத்து

லத்தீன் அமெரிக்க நாடுகளில் விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாடுகள் அதிகரித்துவருவதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளதால் அந்தப் பிராந்தியத்தில் உள்ள தூதரகங்களை வலுப்படுத்தி இலங்கை எதிர்ப்பரப்புரைகளை வலிமையுடன் மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உலகில் எல்லாப் பிராந்தியங்களையும் கவனிக்கத்தக்க வகையில் இலங்கையின் தூதரகங்கள் அமையவேண்டும். இந்த நடவடிக்கையில் லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளின் முக்கியத்துவம் இலங்கைக்கு அதிகரித்துவருகிறது.

போர் முடிவுக்கு வந்தபின்னர் விடுதலைப் புலிகள் கடல் கடந்த செயற்பாடுகளை அதிகரித்து வருகின்றனர். அவர்கள் தற்போது லத்தீன் அமெரிக்க நாடுகளில் நுழைந்துள்ளனர். ஆர்ஜெண்டினாவில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளது. நாம் அந்தப் பிராந்தியத்தை தனிப்படக் கவனிக்கவேண்டும்.

அவர்களின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகள் அந்த நாட்டின் பிரதான ஊடகங்களில் வெளிவருகின்றன. அந்நாட்டு மக்கள் இலங்கையைப் பற்றி மேற்குலக ஊடகங்களில்தான் படிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த கால எல்லை நிர்ணயிக்க வேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் கால எல்லை ஒன்றை வகுத்துச் செயற்பட வேண்டும் என்று ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி கோரியுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் இலங்கையின் மூத்த அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அரசாங்கம் தனது சொந்தப் பரிந்துரைகளை அமெரிக்கா அல்லது ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவையின் அழுத்தத்தின் பேரில் நடைமுறைப்படுத்தக்கூடாது. பரிந்துரைகளை நாம் நிச்சயமாக நடைமுறைப்படுத்தியாக வேண்டும். இது எமது கடமை.

அதன் பின்னர் அதன் உள்ளடக்கங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (அ-2)







யா/ நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வினையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கான வெற்றிக்கேடயத்தினை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன் ஈ.எஸ். பி. நாகரத்தினம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இராணுவத்தினர் வசமிருந்த 22 ஏக்கர் நிலம் மீண்டும் மக்களிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னர் கடந்த 3 வருடங்களுக்கும் மேலாக உயர் பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு கருநாட்டுக்கேணி பிரதேசத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான 22 ஏக்கர் நிலப்பகுதி மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் பாடசாலை , பிரதேச சபைக்கான நிலம் மற்றும் பொதுமக்களுக்கான நிலம் ஆகியன உள்ளடங்கியிருந்தது. இந்த நிலையில் இந்தப் பகுதியை ஆக் கிரமித்திருந்த படையினர் அந்தப் பகுதி புலிகளுடையது என வாதாடியதுடன் அதனை விடுவிக்க முடியாதெனவும் தெரிவித்து வந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

எனினும் இதனை எதிர்த்து மக்கள் பலதடவை மாவட்டச் செயலகத்தின் முன்பு போராட்டங்களை நடத்தியதுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் விடயத்தை தெரிவித்து பல தடவை கோரிக்கைகளையும் வழங்கி வந்தனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் அமைக்கப்பட்ட படைமுகாம் அகற்றப்பட்டுள்ளது. அகற்றப்பட்ட படைமுகாம் தற்போது நெடுங்கேணி பிரதேசத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் புதிய பாடசாலைக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்றுக் காலை பொதுமக்களால் நாட்டப்பட்டுள்ளது. (அ-2)

# மன்னார் ஆயர் இராயப்பு நோர்வேக்கு பயணித்தார்

## திவயின தகவல்

மன்னார் மறை மாவட்ட பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இரகசியமாக நோர்வேக்கு விஜயம் ஒன்றை செய்ததாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பேராயர் இராயப்பு ஜோசப்பும் சட்டத்தரணி ஒருவரும் இவ்வாறு நோர்வேக்கு விஜயம் செய்துள்ளனர்.

நோர்வேயின் ஒஸ்லோ நகர விமான நிலையத்தை சென்றடைந்த பேராயரை அழைத்துச் செல்ல இலங்கைத் தூதரக வாகனம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் இது தொடர்பில் அரசாங்கத்திற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை. ஒஸ்லோ விமான நிலையத்தில் இருந்த புலி எதிர்ப்பு தமிழர் ஒருவரினால் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பேராயரின் நோர்வே விஜயத்தை புலி ஆதரவாளர்கள் மூடி மறைத்துள்ளனர்.

நோர்வேக்கான இலங்கைத் தூதரகம் பேராயருக்கு விருந்துபசாரம் ஒன்றையும் வழங்கியுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# நாகர் கோவிலில் பிள்ளையார் சிலை திருட்டு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் சரித்திரப் பிரசித்தி பெற்ற கௌத்தந்துறைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள விநாயகர் விக்கிரகம் நேற்று திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வழமை போல முற்பகல் 11 மணியளவில் ஆலய குருக்கள் பூஜை செய்வதற்காக ஆலயத்திற்குச் சென்றுள்ளார். அங்கே ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்ட குருக்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்.

அதன்பின்னர் ஆலயத்தின் உள்ளே பார்த்தபோது பெறுமதி வாய்ந்த ஐம்பொன்னாலான விநாயகர் விக்கிரகம் திருடப்பட்டதை அவதானித்த ஆலயக் குருக்கள் உடனடியாக ஆலய நிர்வாக சபையினருக்கு அறிவித்துள்ளார்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாக சபையினர் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ந-8-11)

# கடற்றொழில் அபிவிருத்திக்கு 25 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

யாழ். மாவட்ட கடற்றொழில் உட்கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 25 மில்லியன் ரூபாவை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிதியின் மூலம் யாழ். மாவட்ட மீனவர்களுக்கு தேவையான மீன்பிடி உபகரணங்கள் மற்றும் பொது மண்டபங்கள், இளைப்பாறும் மண்டபங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களம் தெரிவிக்கின்றது. (அ-2)




★ 1767-தாய்லாந்தின் அயுத்தயா பேரரசு பர்மியரிடம் வீழ்ந்தது.

★ 1857-பிரித்தானியக் கிழக்கிந்திய கம்பனியின் வங்காளஇராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டமைக்காக தூக்கிலிடப்பட்டான்.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியானாவில் மான்ஸ்ஃபீல்ட் என்ற இடத்தில் கூட்டமைப்பு படைகள் கூட்டுப் படைகளை தோற்கடித்தன.

★ 1866-ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராக இத்தாலியும் புரூசியாவும் அணி திரண்டன.

★ 1867-முதலாவது உலக கண்காட்சி பாரிஸ் நகரில் ஆரம்பமானது.

★ 1899-மார்த்தா பிளேஸ் என்பவர் மின் இருக்கையில் மரண தண்டனை பெற்ற முதற் பெண்.

★ 1919-பஞ்சாபில் நுழையக்கூடாதென்ற தடையை மீறியதால் மகாத்மா காந்தி டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

★ 1929-டில்லி நடுவண் அரசு கட்டடத்தில் பகத் சிங் மற்றும் பத்துகேஷ்வர் தத் ஆகியோர் துண்டுப் பிரசுரங்களையும் குண்டுகளையும் வீசி தாமாகவே சரணடைந்தனர்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் பிலிப்பைன்சின் பட்டான் மாநிலத்தைக் கைப்பற்றினர்.

★ 1950-இந்தியாவும் பாகிஸ்தானும் லியாக்கட் நேரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

★ 1957-எகிப்தில் சூயஸ் கால்வாய் மீளத்திறக்கப்பட்டது.

★ 1973-சைப்பிரசில் 32 குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றன.

★ 1985-போபால் அனர்த்தம் போபாலில் நச்சு வாயுக்கசிவினால் 2 ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்த நிகழ்வுக்காக இந்தியா யூனியன் கார்வைட் நிறுவனத்துக்கெதிராக வழக்குத் தொடர்ந்தது.

★ 2000-அரிசோனாவில் அமெரிக்கக் கடற்படை விமானம் ஒன்று வீழ்ந்ததில் 19 கடற்படையினர் உயிரிழந்தனர்.

★ 2004-சூடான் அரசுக்கும் இரண்டு தீவிரவாத அமைப்புக்களுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1911-மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1997)

★ 1938-கோபி அன்னான், நோபல் பரிசு பெற்ற முன்னாள் ஐக்கிய நாடுகள் அவைப் பொதுச் செயலர்

### இறப்புக்கள்

★ 1857-மங்கள் பாண்டே, பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் படை வீரர் (பி.1827)

★ 1931-எரிக் கார்ல்ஃபெல்ட், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி.1864)

★ 1936-ரொபேர்ட் பாரானி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1876)

★ 1984-பியோத்தர் காப்பிட்சா, நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (பி.1894)

★ 1992-டானியேல் போவெட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1907)



★ 1973-ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற ஓவியர் பாப் லோ பிக்காசோவின் நினைவு தினம் (பி.1881)

# அதிசய உலகம்...



# 10 ஆயிரம் முட்டைகளினால் தயாரிக்கப்பட்ட ஈஸ்டர் மரம்



ஈஸ்டர் தினத்தை பிரமாண்டமான முறையில் கொண்டாடும் முகமாக ஜேர்மனியில் அப்பிள் மரம் ஒன்றில் வர்ணம் பூசப்பட்ட 10,000 முட்டைகளைப் பயன்படுத்தி ஈஸ்டர் மரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பிரமாண்டத்தை 76 வயதுடைய வோல்கர் க்ராவ்ட் என்பவரும் அவரு டைய குடும்பத்தாரும் இணைந்து மேற் கொண்டுள்ளனர்என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகில் மிகப்பெரிய ஓவியத்தை வரைந்து மாணவர்கள் சாதனை




பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தை சேர்ந்த பள்ளி-கல்லூரி மாணவர்கள் உலகின் மிகப்பெரிய ஓவியத்தை வரைந்து சாதனையை நிகழ்த்தினார்கள்.

லாகூர் நகரில் உள்ள ஆக்கி அரங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சுமார் 1000 மாணவர்கள் கலந்து கொண்டு 7 மணி நேரத்தை செலவிட்டு 41685 சதுர அடி கொண்ட ஓவியத்தை தீட்டினார்கள்.

இந்த சாதனை பற்றி விழா குழுவினர் குறிப்பிடுகையில், பாகிஸ்தான் தினம் கொண்டாட்டத்தை முன்னிட்டு மிகப் பெரிய ஓவியம் தீட்ட ஏற்பாடு செய்தோம் என தெரிவித்தார்.

அரங்கத்தில் ஆயிரக்கணக்கில் குழந்தைகள், பொதுமக்கள் திரண்டிருந்து இந்தக் காட்சியை கண்டுகளித்தனர் என்று தெரிவித்துள்ளார்.

# உலகில் மிக அதிசயமான தொழில்நுட்பம் -கூகுளில்




இன்ரர்நெட் உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கூகுள் நிறுவனம் உலகின் முதல்தர தேடுபொறியாக உள்ளது. இக் கண்ணாடி 2012 ஆம் ஆண்டு இறுதியில் விற்பனைக்குவர உள்ளது. கம்பியூட்டர் செயற்பாடுபோல இயங்கும் இக் கண்ணாடியில் உள்ள அம்சங்களே தனி . இதில்ஜி.பி.எஸ் என்னும் செயற்கை கோள் (சட்டலைட்) வழிநடத்தல் இருக் கிறது.

இதனூடாக நடை பயணிகள் ஒரு வீதியை அல்லது வீட்டில் இலகுவாக கண்டுபிடிக்க முடியும். வீடியோ படம் எடுக்க முடியும். எடுத்த படத்தை நண்பர்களுக்கு 1 செக்கனில் அனுப்பவும் முடியும். அதுமட்டுமா! நான் சொல்லும் கட்டளைகளை அது நிறைவேற்ற வல்லது.

படம் எடு என்று மட்டும் சொன்னால் போதும். அது உடனே படம் எடுக்க ஆரம்பித்துவிடும். 4 ஆம் தலைமுறை இன்ரர்நெட் வசதிகொண்டதாக அது அமைந்துள்ளது. சிறந்த தேடுபொறியாகவும் அதனைப் பயன்படுத்தலாம் மொபைல் தொலைபேசி உள்ளது. அழைக்கும் நபரின் உருவம் கண்ணாடியில் தோன்றும். பிறிதொருவர் இதேபோல் ஒரு கண்ணாடியை அணிந்திருந்தால் அவர் உங்கள் நண்பராக இருந்தால் அதனையும் அது காட்டவல்லது.

அந்நபர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் என்பதனைக் கூட அது துல்லியமாகக் காட்டிவிடும். கூகுள் வெளிவிடும் இக் கண்ணாடி குறித்த காணொளியை வெளியிட்டுள்ளனர். அதனைப் பார்த்தால் மீதம் விளங்கும்.

# விலங்குகளின் வெற்றுடல்கள்



கோடைகால விடுமுறையின் பொருட்டு லண்டன் தேசிய வரலாற்று அருங்காட்சியகத்தில் கண்காட்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் நூற்றுக்கணக்கான விலங்குகளின் வெற்றுடல்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன. காட்சிப்படுத்தப்பட்ட விலங்குகளின் எலும்பு அமைப்புக்கள், குருதிக் குழாய்கள் என்பன பிளாஸ்ரிக்கினால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியானது எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 16 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.


# உயரமான கட்டடத்தில் ஏறி சாதனை படைத்த அபூர்வ மனிதன்



மொஸ்கோ நகரில் காணப்படும் 577 அடிகள் உயரமான எம்பான் மென் கட்டடத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்ஒரு அதிசய மனிதர்.

இக்கட்டடம் 32 தட்டுக்களை கொண்டதுடன் 1952 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்சிமிட்டும் அதிசய மோதிரம் பார்த்ததுண்டா



தங்கம், வெள்ளி போன்றவற்றில் மோதிரம் அணிந்து பார்த்திருப்பீர்கள். ஆனால், தொழில்நுட்பத்துடன் கூடிய மோதிரம் அணிந்ததை பார்த்திருக்கின்றீர்களா?

இதோ வந்துவிட்டது. நீங்கள் அணியும் பிளாஸ்ரிக் மோதிரம் உங்களின் தொடுகை, விசேட ஒலிகள் கணனியின் கட்டளைகள் என்பவற்றிற்கு ஏற்றவாறு கண்சிமிட்டும் ஆற்றலைக் கொண்டது. இம்மோதிரமானது புளூடூத்,LED தொழில்நுட்பத்துடன் கூடியதாக ஜப்பானில் தயாரிக்கப்பட்டுள்ளது.

# ஒளியிடம் இருள் தோற்றுப்போனதை உலகிற்கு எடுத்துக் காட்டும் திருநாள்



அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி

விடிந்து கொண்டிருந்தது. எருசலேம் நகரம் இன்னும் துயிலெழவில்லை. சில பெண்களுக்கு மட்டும் தூக்கமில்லை. விடிந்தும் விடியாத நிலையில் நறுமணப்பொருட்களுடன் மங்கையர் மூவர் விரைந்து சென்றனர். ஒரு கல்லறை நோக்கி பலவிதமான ஐயப்பாடுகளுடனும் அச் சநடுக்கத்துடனும் சென்றாலும் தங்கள் அன்புத் தெய்வத்தை தேடி இனிய, தூய நினைவுகளுடன் கல்லறையை பார்த்தனர். அளவற்ற ஏமாற்றம் அடைந்தனர்.

ஆனால் அங்கே ஒரு வெற்றித் தூது வானவரால் *அவர் இங்கே இல்லை அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்...* கேட்டவுடன் ஆனந்தம் கொண்டனர். அனை வருக்கும் இந்நல்ல செய்தியை அறிவித்தனர்.

## இன்று உயிர்ப்பு ஞாயிறு

கிறிஸ்துவின்உயிர்ப்புநாள் வானம் வாழ்த்துக் கூறிய ஒருநாள் நன்நாள். ஒளியிடம் இருள் தோற்றுப் போனதை உலகிற்கு எடுத்துச் சொல்லுகின்ற பெருநாள். வீழ்ந்தோருக்கும் வறியோருக்கும் உதயம் உண்டு எனும் நம்பிக்கையை நிலைநாட்டுகின்ற திருநாள். இவ்வுலகில் ஒளிக்கும் இருளுக்கும் உண்மைக்கும் பொய்மைக்கும் நீதிக்கும் அநீதிக்கும் அன்புக்கும் அராஜகத்திற்கும் இடையே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இப்பெரும் போராட்டத்தில் ஒளியின் சக்திகளும் உண்மையின் சக்திகளும் நீதியின் சக்திகளும் அன்பின் சக்திகளும் வெற்றி பெறும் என்பதை உணர்த்தும் விழா தான். தீமைக்கும் பொய்மைக்கும் இருளுக்கும் வன்முறைக்கும் சாவு மணி அடிக்கும் விழாதான் உயிர்ப்பு விழா.உண்மை உறங்கும். ஆனால் ஓயாது! நீதி நசுக்கப்படும். ஆனால் நலியாது! அன்பு அமுக்கப்படும். ஆனால் அழியாது என்பதை சுட்டிக்காட்டும் விழாதான் உயிர்ப்பு விழா.

அன்று உங்களுக்கு *அமைதி உரித்தாகுக* என்ற இயேசுவின் வார்த்தை துயரத்தின் எல்லையை அடைந்த சீடர்களின் சோர்வுக்கும் தேய்வுக்கும் ஒரு முடிவு கண்டு உள்ளத்துக்கு அமைதியையையும் மகிழ்ச்சியையும் அளித்தது. போர் நெருக்கடியும் அபாயமும் கோடிக்கு மேற்பட்ட அகதிகளின் அவல நிலையும் இயற்கை யின் சீற்றமும் அதனால் ஏற்பட்ட சேதமும் கூட்டக் கொலைகளும் கொடுமைகளும் தாண்டவ மாடும் இந்நாட்களில கிறிஸ்துவின் உயிர்ப்பு எமக்கும் அன்பு, அமைதி, நீதி ஆகிய பண்பு களை அள்ளித்தரும் உயிருள்ள வார்த்தைகளை அளித்திட வேண்டும் என்பதே எங்களது ஆவலாக உள்ளது.இன்று நாடு, சமூகம், மொழி, இனம், குலம் யாவும் மனிதனை மனிதனின்று பிரிக்கும் பின்னிப்பின் சின்னங்களாக காட்சியளிக்கின்றன. கிறிஸ்து அவனிக்கு அளித்த அன்பு, அமைதி, ஈகை, இரக்கம் இவையாவும் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டனவா? என வினாக்கள் எம்மிடையே எழுகின்றன.

மனிதனுடைய அறிவும் நாகரீகமும் பண்பாடும் மேம்பாடும் பல வெற்றிகளை உலகிற்கு அளித்த போதும் போரை உலகினின்று ஒழிக்கவில்லை. நாளும் துன்ப சுமைகளை சுமந்தவர்களாக கவலையோடும் கண்ணீரோடும் பசியோடும் பிணியோடும் விடிவே கிடையாதா என்று சாவை நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு உண்மையான விடுதலையையும் அமைதியையும் பெற்றுத் தராதா என்பதே எங்கள் ஒவ்வொருவரினதும் ஏக்கமும் எதிர்பார்ப்புமாக உள்ளது.

இலட்சியவாதிகள், நல்மனம் படைத்தவர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள் தோல்வியை சந்திக்கலாம். ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல. ஒளிவரும் வரை தான் இருளின் ஆட்சி, ஒளிவந்துவிட்டால் இருளுக்கு வீழ்ச்சி, தர்மத்தின் சக்திகளும் நன்மையின் சக்திகளும் இறுதியில் வெற்றி அடைவது திண்ணம்.

இறைமையையும் மனித நேயமும் வெற்றிவாகை சூடுவது உறுதி. இதுதான் பல எதிர்பார்ப்புகளுடன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை நோக்கும் எமக்கு கிறிஸ்து கூறும் பதிலாகவுள்ளது. எனவே இலட்சியவாதியை சாவு தன் சங்கிலிக்குள் வைத்திருக்க முடியாது என்பதை உணருவோம்.உள்ளங்களுக்குள் ஒளிந்திருக்கின்ற பகைமை இருளை இயேசுவின் உயிர்ப்பு எனும் கருணை வெளிச்சத்தால் விரட்டுவோம். கண்ணீருக்கும் கவலைகளுக்கும் இனி விடை கொடுப்போம். புதிய நம்பிக்கையோடு எமது வாழ்வில் வீறுநடை போடுவோம்.

# பயங்கரவாதிகளுக்கு நட்டஈடு வழங்கமுடியாது

## அரசாங்கம் திட்டவட்டம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்மொழிவுகளின் அடிப்படையில் பயங்கரவாதிகளுக்கு நட்டஈடு வழங்க முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

உலகின் எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதிகளுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை.ஆணைக்குழுவின் 250 முன்மொழிவுகளில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த புலிகளின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளினால் இந்த நாட்டுக்கு 50 பில்லியன் ரூபா விற்கும் மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் இந்த முன்மொழிவானது எல்லை மீறியதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-2)

# திராட்சை உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள்

சமாதான சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் விவசாயிகள் திராட்சை செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன் அதற்கு நல்ல சந்தை வாய்ப்பும் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இளவாலை, விளான் மற்றும் பெரியவிளான் ஆகிய பிரதேசங்களில் திராட்சை பெரியளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. வடமாகாணத்தின் திராட்சை உற்பத்தி நடவடிக்கைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உறுதியளித்துள்ளதாக திராட்சை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

**யாழ். மாவட்டத்திலிருந்து பிரதேச செய்தியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.**

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, பால், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கிராமசேவகர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, தொலைபேசி இலக்கம், கல்வித்தகைமை, தற்போது செய்யும் தொழில், செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் பிரதேசம் ஆகியவை உள்ளடங்கலாகத் தயாரிக்கப்பட்ட விண்ணபத்தை,

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல. 3, 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு உடனடியாக சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.


## உண்மை நிலை

# வட்டி வீதங்கள்

வட்டி வீதம் என்பது பணத்தின் விலையாகும். எந்தவொரு மற்றைய சந்தைகளிலும் உள்ளதைப் போன்றே, மக்களில் சிலர் மேலதிகப் பணத்தினைக் (சேமிப்போர்) கொண்டிருக்கின்ற வேளையில் மற்றையவர்களுக்கு (கடன்பாட்டாளர்) இது மிகத் தேவையானதொன்றாக இருக்கும். சேமிப்பவர்களும் கடன்பாட்டாளர்களும் பொருளாதாரமொன்றிற்கு சமஅளவில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகவுள்ளனர். **நிதியியல் சந்தை சேமிப்பாளருக்கும் கடன்பாட்டாளருக்குமிடையிலான தொடர்புகளுக்கு உதவுவதுடன் மத்திய வங்கி வட்டியைத் தீர்மானிக்கிறது. இதன் மூலம் இச்சந்தையில் செல்வாக்குச் செலுத்துவதற்கு பணத்தின் செலவு சீராக்கம் செய்யப்படுவதுடன் விரும்பிய பெறுபேறுகளும் எய்தப்படுகின்றன.** பொருளாதாரமொன்று அதனால் இயலக்கூடியதிலும் பார்க்க மெதுவாக வளர்ச்சியடையும் பொழுது மத்திய வங்கி சேமிப்பதிலும் பார்க்க வீட்டுப்பொருட்களை நுகரச் செய்யும் விதத்திலும் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வியாபாரக் கடன்பாடுகளை மேற்கொள்ளும் விதத்திலும் வட்டி வீதங்களைக் குறைக்கமுடியும். மிக வேகமாக வளர்ச்சியடைகின்ற பொருளாதாரமொன்றினை மெதுவாக்குவதற்கு மத்திய வங்கி வட்டி வீதங்களை உயர்த்தமுடியும். இதன் மூலம் வாடிக்கையாளர் கூடுதலாக சேமிக்கக் கூடியதாகவுள்ள வேளையில் வியாபாரம் கீடன்பாடுகள் குறைக்கப்பட்டு உற்பத்தியும் குறைவடைகிறது. வட்டி வீதங்கள் சில சமயம் சந்தைகளைப் பாதிப்பதற்கு 18 மாதங்களுக்கும் கூடுதலான காலத்தை எடுக்கிறது. அதனால்தான் வட்டி வீதங்களை மாற்றும் பொழுது மத்திய வங்கி பொதுவாக எறிவு செய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் போக்கினை எதிர்வு கூறுகிறது. **எனவே, மத்திய வங்கி எதிர்காலத்தில் எதிர்பாபுக்கப்படும் பெறுபேறுகளையும் விரும்புகின்ற குறிக்கோள்கள்ளையும் வடிவமைத்துக். கொள்வதற்கும் இன்று நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.** தாழ்ந்த பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்களின் காரணமாக, மத்திய வங்கி கடந்த 3 ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க நீண்ட காலப்பகுதியொன்றிற்கு தாழ்ந்த வட்டி வீதங்களை பேணக்கூடியதாக இருந்த போதும் கொள்கை வட்டி வீதங்களில் செய்யப்பட்ட அண்மைய அதிகரிப்புக்களின் பெறுபேறாக பொருளாதாரம் ஏறத்தாழ 7.2% வளர்ச்சிக்கு மெதுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அத்தகைய வழிமுறைகள், இனிவரும் ஆண்டுகளில் பணவீக்கம் தொடர்ந்தும் குறைவடைவதனை உறுதிப்படுத்தும்.

CERTIFIED
CENTRAL BANK OF SRI LANKA ★ இலங்கை மத்திய வங்கி

(சி-6295)

# தீர்மானத்தைப் புறக்கணித்தால் சுயாதீன விசாரணை தவிர்க்க முடியாததாகும்

**கொலம்பிய பல்கலைக்கழகத்தின் சர்வதேச மற்றும் பொது விவகாரங் கள் கல்லூரியின் ஒரு பட்டதாரியான நியூயோர்க் நகரைச் சேர்ந்த சர்வதேச ஆலோசகரான கிப்சன் பேற்றன் லத்தீன், அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் தெற்காசியாவில் முன்னணி அரச சார்பற்ற தன்னார்வ நிறுவனங்களில் பணியாற்றியிருக்கிற இவர் இலங்கை தொடர்பாக வெளியிட்டுள்ள தனது ஆய்வில் கீழ்க்காணுமாறு தெரி விக்கிறார்.**

இலங்கைக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமைகள்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் முன்வைத்ததுள்ள மற்றொரு காரணம்: ***கூட்டுக் கடப்பாடுகள்*** ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த சில நாடுகள் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு தமது ஆதரவை வழங்க முன்வராத போதிலும், ஆதரவாக வாக்களிக்க வேண்டுமென அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் இலங்கைக்கெதிராக முன்வைக்கப்படும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பதென ஐரோப்பிய ஒன்றியத்தில் குழுத் தீர்மானம் இயற்றப்பட்டதாகவும், அதில் அங்கம்வகிக்கும் நாடொன்றின் பேராசிரியர் பீரிஸுக்குத் தகவல் வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கக் காங்கிரஸைச் சேர்ந்த சில அரசியல்வாதிகளும் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை சாதகக் கண்கொண்டு பார்க்கவில்லையெனவும் இது அரசியல் சார்ந்த விடயமாக இருப்பதே இதற்குக் காரணம் எனவும் பீரிஸ் அறிவித்திருந்தார். மேலும் **இலங்கையின் உள்விவகாரத்தில் எந்தவொரு வடிவிலும் வெளிநாட்டுத் தலையீடு மேற்கொள்ளப்படுவதை இலங்கை அரசாங்கம் சகித்துக் கொண்டிருக்கமாட்டாது** என்று பேராசிரியர் பீரிஸ் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் ஜெனீவாத் தீர்மானத்திற்குப் பின்னரான நிலைப்பாடு என்றால் இவை கருதிநிற்பது என்ன? இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் தனது நேரத்தையும் வளங்களையும் தவறாகப் பயன்


**நியூயோர்க்கைச் சேர்ந்த சர்வதேச ஆய்வாளரும் ஆலோசகருமான, *கிப்ஸன் பேற்மான்***

படுத்தியுள்ளது. தவிர ஜெனீவா சென்ற இலங்கைப்பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை தாங்குவது யார் என்பது தொடர்பாக தெளிவான வரையறைகளை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் எடுத்திருக்கவில்லை. அதாவது பேராசிரியர் பீரிஸோ அல்லது மஹிந்த சமரசிங்கவோ இலங்கையிலிருந்து ஜெனிவா சென்ற பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை தாங்குவது என்பது தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை.

ஜெனீவாவில் தற்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தேசிய நல்லிணக்கம் மற்றும் 'அனைத்துலக இராஜதந்திர நகர்வுகள் போன்றவற்றை இலங்கை அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்பது மிகவும் சுவாரஸ்யமான விடயமாகும். சிலநாட்களுக்கு முன்னர் ஜெனீவாவில் இக்கட்டான சூழ் நிலைக்குள் தள்ளப்பட்ட இலங்கை அரசாங்கம் அடுத்த 12 மாதங்களுக்கும் நடைமுறைப்படுத்தவேண்டிய பரிந்துரைகளை கருத்திற்கொண்டு தெளிவான மூலோபாயத்திட்ட வரைபை வரைந்து கொள்வதுடன் இது தொடர்பில் தனது அரசியல் முதிர்ச்சியைக் காண்பிக்க வேண்டிய பொருத்தமானதும் சரியானதுமான நேரம் இதுவாகும்.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானம் **கூட்டுக்கடப்பாடுகளின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டது** என்று அண்





மையில் இலங்கை வெளியுறவு அமைச்சரால், விடுக்கப்பட்ட அறிக்கை சில மேற்குலக நாடுகளின் மத்தியில் முரண்படுகளைத் தோற்றுவித்துள்ளது. இந்நிலையில் இலங்கை அரசாங்கம் எவ்வாறு இந்தத் தீர்மானத்தை ஏற்று அதன் நடைமுறைகளுக்குக் கட்டுப்பட்டு, செயற்படப்போகிறது என்று கூறுவதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டும். அத்துடன் தனது அரசாங்கத்தின் பலவீனமான ராஜ

## சர்வதேசம் இலங்கையை எச்சரிக்கிறது

தந்திர நகர்வு தொடர்பாகவும் தோல்வியடைந்த கொள்கை நிலைப்பாடுகள் தொடர்பிலும் மீள்பார்வை செய்யப்படவேண்டும். அதாவது, இதனை அரசாங்கம் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் செயற்படுத்தவேண்டும். ஆனால், இதற்குப் பதிலாக இலங்கை ஜனாதிபதி பக்கச்சார்பான ஊடக அறிக்கைகளால் தனது அரசாங்கம் எவ்வாறானபாதிப்பைச் சந்தித்துள்ளது என்பதை வெளிப்படுத்தி வருவதில் அதிகநேரத்தைச் செலவிடுகிறது. ஊடகங்கள் இவ்வாறான கருத்துக்களை, காணொளிகளை எப்போது வெளியிடத் தொடங்கியது என்பதை இலங்கை ஜனாதிபதி குறிப்பிட மறந்து விட்டார். அதாவது இலங்கையில் இடம்பெற்ற உரிமைமீறல்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக் கூறாது அவற்றுக்கான தண்டனைகள் வழங்க முன்வராதபோதே ஊடகங்கள் இலங்கை விவகாரம் தொடர்பான உண்மைகளை வெளியிடத்தொடங்கின.

கெடுவிளைவாக இலங்கை அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே உறுதியற்ற, தெளிவற்ற விதத்தில் அதன் கருத்துக்களை வெளிப்படுத்தியதால், தற்போது அதனால், நடைமுறை யதார்த்தத்திற்கு முகங்கொடுக்க முடியவில்லை.

இலங்கை மீது நிறைவேற்றப் பட்ட தீர்மானத்திற்கு 40 நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன. இதன் மூலம் அவை எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தியுள்ளன. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் தொடர்ந்தும் கவனத்தில் எடுக்கப்படும் என்பதையும் குறைந்தது 2013 ஆம் ஆண்டு வரையாவது இது தொடர்பில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் உறுப்புநாடுகள் கவனம் செலுத்தும் என்பதையும் இத்தீர்மானம் வெளிப்படுத்தி நிற்கிறது. 2013 மார்ச்சில் பேரவை 22வது கூட்டத்தொடரை நடத்தும்போது மனித உரிமைகளுக்கான ஐ.நா.வின் உயர் ஆணையாளர், இலங்கை அரசாங்கம் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றியபோது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் இது விடயத்தில் எவ்வாறு பணியாற்றியது என்பதை உள்ளடக்கிய அறிக்கையை சமர்ப்பிப்பார்.

இத்தீர்மானத்தின் பிரகாரம் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகமானது இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடனேயே அதற்கு உதவ முடியும். ஆனால், இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சில தினங்களின் பின்னரும் இலங்கை மேற்குலக நாடுகளின் சதி, மனித உரிமைகள் பேரவையின் குறைபாடு தொடர்பாக விமர்சனங்களை வெளியிடுகிறது. அத்துடன் **எந்தவொரு வெளிநாட்டின் உதவிகளும் தனக்குத் தேவையில்லையென இலங்கை அரசாங்கம் வெளிப்படையாகத் தெரிவித்து வருகிறது.** இத்தடவை ஜெனீவாவில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும் கூட தொடர்ந்தும் இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றாது இழுத்தடிக்கும் போது இலங்கை விடயத்தில் சர்வதேச சமூகம் அதன் தலையீட்டை மேற்கொள்ளாதா?

இலங்கை அரசாங்கம் ஜெனீவாத் தீர்மானத்தை அதிக சிரத்தையுடன் செயற்படுத்தாவிட்டால், மனித உரிமைகள் பேரவையில் 22 ஆவது கூட்டத்தொடரில் எந்தவொரு பதில் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது என அரசாங்கத்தரப்புக் கருதுகிறது. ஆனால், ஜனாதிபதி இத் தீர்மானத்தை ஏற்றுச்செயற்படாவிட்டால் இலங்கைத் தீவில் வாழும் மக்கள் தொடர்ந்தும் வன்முறைகளைச் சந்திப்பதுடன் பேரினமொழி, சமய தேசியவாதம் மேலும் தீவிரம் பெறும். அத்துடன் ஐ.நா.வின் பல்வேறு அமைப்புக்களின் அழுத்தங்களுக்கும் தொடர் விளைவுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிவரும்.

**தொடர்ந்தும் சட்டங்களை மதிக்காது, தமிழ்மக்களின் உரிமைகளை மதிக்காது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றாது தான்தோன்றித்தனமாக செயற்படுமிடத்து யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் தற்போதும் உச்சரிக்கப்படும் சுயாதீன விசாரணை என்பதை எதிர்கொள்வது தவிர்க்கமுடியாததாகும்.**

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

## இமயம் தொட...

மழைத்துளி
நான் மண்ணுக்குள் செல்வதா?
என நினைத்தால்
நிலத்தடியில் மனிதற்கு
நீர் கிடைக்காது
நீ வாழ மழைத்துளி
தன்னைத் தியாகம் செய்கிறதே!
பிறர் வாழ
உன்னை தியாகம் செய்
தியாகியாக...

மாவை நா.கஜேந்திரன்

### ஒரு புதினத்தின் புலம்பல்

வாசகனே எதைத் தேடுகிறாய்
என் இதழ் வரிகளில்
உன் வாழ்வின் வளத்துக்கான
வளமிகு உன்னத வரிகளையா?
என் நினைவிலும் நித்தம்
உனக்கான பிரார்த்தனைகளே
இருந்து மென்ன? என்னிருப்பில்
நீண்டகால நிலைத்திருப்பு
இழிநிலை செய்திகளும்
இளவுச் செய்திகளும் இவைகள் நான்
வலிந்து வரித்தவைகளல்ல
வலிந்தே வந்தவைகள்
காலம் கனியும் என்றனர்
காத்திருந்தோம் நீயும் நானும்
கனியாமல் கனிந்ததெல்லாம்
வலிநிறைந்த வன்மங்கள் தாம்
நான் மண்டியிடுவேன் உன்னிடம்
மன்னிப்புக் கேட்பேன் என்பது
உனது அர்த்தமற்ற கற்பனை
ஏனெனில் உன் போன்றோர்
எனக்களித்த கௌரவப்பட்டம்
காலத்தின் கண்ணாடி

க.ஞானசிலன்
கொற்றாவத்தை

### அவரவர் பார்வையில்

#### உயிர்ப்பு

மின்னல் மின்னி இடி முழங்க
புயலும் அடிக்க
உண்மை விளக்கு எரிந்து
கல்லறை உடைத்து

உயிரோவியன்

#### நட்பு

வீணை பார்ப்பதில்லை
விரல்கள் யாருடையதென்று
நட்பு பார்ப்பதில்லை
பழகுபவரின் முகங்கள் எப்படியென்று

#### வாழ்வு

வாழ்க்கை என்றால் துணிச்சல்
விடாமுயற்சி தான் அதன் பொருள்

#### நிறைவு

எண்ணம் மலர்
சிந்தனை மொட்டு
செயல் கனி
இதுவே நிறைவு

அ.நளினாசினி

### வயோதிபம்

ஆரவாரமின்றி அமைதியைத்
தேடுது நெஞ்சம் நோய் நொடியின்றி உலவ
ஏங்குது பொய்யுடம்பு பணமில்லையே என்று
நீர் பனிக்குது கண்கள் நிறைய உண்டு நிரப்ப
ஏற்குதில்லை கொடிய வயிறு
சொல்லப் போனால்....
பிள்ளைகள் நாளும் நச்சரிப்பு
கட்டிய மனையாளும் நச்சரிப்பு
துள்ளி வெளுக்க வலுவுமில்லை
துவண்டேன் படுக்கையில்
பருவம் கிழடென்றால்
இது தானோ நிலைமை

மானந்தன்
அல்வாய்

### பூங்கொடி

காவியச் சிலம்பாய் நான் இருந்தால்
உன் கால்களிலாவது தவழ்ந்திருப்பேன்
தென்றல் காற்றால் நான் பிறந்திருந்தால்
உன் சேலையிலாவது ஒளிந்திருப்பேன்
பூங்கொடி அதனை இழந்து விட்டேன்
மனிதனாய் அல்லவா பிறந்து விட்டேன்

தாவடி
நித்தி

### திறக்காத வழி

வியர்வை சிந்தி உழைத்த பணத்தில்
வில்லங்கமற்றுக் கட்டப்பட்ட
கல்வீடு இப்பொழுது
போர்துப்பிய சக்கையாய்
அறிவுக்கு புலப்படாதவொரு குறியீடாய்
திறந்துகிடக்கும் தெருப்படலை
நோக்கி இப்பொழுது
தவமிருக்கிறது என்பார்வை
ஒரு தற்காலிக வீட்டுக்காக
சிந்தனைகள் முளை விடுகின்றன
எனக்குள் முள்ளிவாய்க்காலொடு
முடங்கிய என்வாழ்வு குறித்து

அ.பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

## மௌனத்தின் தேடல் - 116



### சாதனை

உரிய முறையில் வளர்த்த
பெரிய காளை பூட்டி
பாரம்பரிய போட்டி
வீரப்பண்பை ஊட்டி
வண்டிச்சவாரி நாட்டில்
எஜமான் விசுவாசம் காட்டி
விரைந்து போவது சாதனை

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### புரியவில்லையே!?

எரிபொருள் ஏறியதால்
எருதுகட்டு கொண்டாட்டமா?
சரியான தீர்வு கூற
சவாரி கொண்டாட்டமா?
புரியவில்லை ஒன்றும் எம்
புரிந்துணர்வு போல....

பொ.புனிதன்
வரியப்புலம்

### மீகக் குறைவு

தமிழர்களின் பெருமையை
பறைசாற்றும் இந்தப்
பாரம்பரிய விளையாட்டு
இன்றும் ஒரு சில இடங்களில்
மட்டுமே எஞ்சி உள்ளது

ஜெயரூபன்
பருத்தித்துறை

### வண்டிச்சவாரி

வறன்ட வெளிதனில்
மாட்டு வண்டிச் சவாரி
வெள்ளை நிற மாடுகளும்
வேகமாய் ஓடுகின்றது
வெற்றியின் முடிவும்
அவர்கள் கையில் தான்

அ.மேரிஅல்போன்சா
குருநகர்

### மீண்டும் வருமோ

கொல்லைப் பூவரசில்
புள்ளிச் சேவல் கூவ
முற்றத்து மாமரத்தில்
கவிக்குயில் இசைபாட
கந்தன் கோயில் மணி
கணீர் கணீரென ஒலிக்க
வீட்டு முன் ஒழுங்கையில்
இரட்டை மாட்டு வண்டி
சல சலவென ஓட
விடிகாலைப் பொழுதினில்
ஓலைக் குடிசையிலே
நாம் கண்ட சுகம்
மீண்டும் எமக்கு வந்திடுமோ?

சிவவடிவேல்
இணுவில் மேற்கு

### சபாஷ்

மாட்டுவண்டிச் சவாரி
எம் மண்ணில் தொடர வேண்டும்
எம் எதிர்காலச் சந்ததியும்
அதைப்பார்த்து மகிழ வேண்டும்
ஏர் பூட்டி உழவுத் தொழில்
செய்ய வேண்டும்
விவசாயிகள் வாழ்வும்
சிறக்க வேண்டும்

அ.அன்பு
கறுக்காய்

### மனத்துணிவு

ஆயிரம் மனச். சுமைகள்
ஆறா மனவடுக்கள்
மறக்க முடியுமா
இழப்புக்கள் ஆயினும்
மன களி /விளையாட்டில்
ஈடுபடுவது தமிழரின்
அழித்திட முடியா
மனத்துணிவின் எடுத்துக்காட்டு

கமலா இளங்கோவன்
யாழ்ப்பாணம்

### வீர மரபு

மண்ணை நேசிக்கும்
மனிதத்தின் வீரம்
மாண்பு பெறுவது
எமக்கே உரித்தான இவ்
மரபுரிமை
பண்பாடுகளால் தான்...

வா. ஜெயபிரசன்னா
யா/ஹாட்லிக்கல்லூரி

### வீர ஓட்டம்

வீழ்ந்தும் எழுவோம்
விண்ணில் பறப்போம்
வீர ஓட்டம் போட்டு
விசும்பையும் கிழிப்போம்
என காட்டும் வீரர் குழாம்

பு.ஜீவனா
கரவெட்டி

### பரிகளா நரிகளா?

தோடுடைய செவியனை
சுமந்த காளைகள் இவை
பலத்தில் குறைந்திடுமோ?
விரைவான சவாரிதான் பாருங்கள்
இங்கு போட்டியிட நரிகள்தான்
பரிகளாய் வந்தனவோ?
புராணக்கதை என் ஞாபகத்தில்

லீலா- சிவவடிவேல்
இணுவில்மேற்கு

### காளை

பந்தயத் திடலிலே
பாய்ந்தோட துடிக்கும்
காளைகள்!
முந்தியே வருமென
முகவாய் மலர்ந்துமே
அந்தரமாய் துரத்திடும்
காளையர்...!

பெ.சத்துருக்கன்
யாழ்ப்பாணம்

### சவாரி

வாழ்க்கைச் சவாரி வலிதெனினும்
நல் வண்டிச்சவாரி இனிதே யென்று
மாட்டுவண்டிச்சவாரி தனின்
மாண்பினை மீட்கும் நல் மானிடரிவர்

க.ஞானசிலன்
கொற்றாவத்தை

### போட்டி

மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி
மனிதனுக்கா அல்லது
மனிதனுக்கு உதவும்
நாலுகால் ஜீவனுக்கா
மனிதன் தன் வெற்றியை
மார்பு தட்டிச் சொல்ல
மண்ணில் பாடாய் படுகிறது
வாய்பேசா ஜீவன்கள்

ஏ.அன்றன்
யாழ்ப்பாணம்

### பிறள்வு

மாடு வண்டி பூட்டி
வெட்ட வெளிதனிலே
கெட்டித்தனம் காட்டும் மானிடரே
கெட்டநேரம் உமக்கு வந்தால்
'வண்டியில் உமைப்பூட்டி
சவாரி செய்யும் மாடுகள்

உதிஸ்ரன்
சங்கானை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் -117



### அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.04.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# சொத்துக்கள், பொறுப்புகளின் விபரங்களை விரைவில் தாருங்கள்

## அரசியல் கட்சிகளிடம் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்த அதிகாரிகளின் சொத்துக்கள், பொறுப்புகளின் விபரங்கள் எதிர்வரும் ஜுன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு கடிதம் மூலம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்சட்டமூலத்திற்கு அமைவாக அரசியல் கட்சிகளின் அதிகாரிகள் தமது சொத்து, பொறுப்பு விபரங்களை வெளியிட வேண்டியது அவசியமாகிறது.

தேர்தல்களில் போட்டியிட்ட தருணங்களில் குறித்த விபரங்களை வழங்கிய அதிகாரிகளுக்கு இந்த அறிவித்தல் உரித்தாகாது என ஆணையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலர் ஏற்கனவே தமது சொத்து, பொறுப்பு விபரங்களை வழங்கியுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# அடுத்த நான்கு தசாப்தங்களில் சனத்தொகை அதிகரிப்பு ஏற்படும்

## ஐ.நா. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியாவும் சீனாவும் அடுத்த நான்கு தசாப்தங்களில் சனத்தொகையில் துரித அதிகரிப்பை எதிர்கொள்ள நேரிடுமென ஐ.நா.குறிப்பிட்டுள்ளது.

இதனால் மக்களுக்கு தொழில் வாய்ப்புகள், வீடுகளுக்கான மின்சாரம் மற்றும் உட்கட்டமைப்பு துறைகளில் சவால்களை எதிர்கொள்ள நேரிடுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளின் சனத்தொகையில் துரித அதிகரிப்பு ஏற்படும் என்பது ஐக்கிய நாடுகளின் உலக நகரமயமாக்கல் மீளாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்தியா, சீனா, நைஜீரியா, அமெரிக்கா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பு உயர் வீதத்தில் காணப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

2010 தொடக்கம் 2050 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்திய சனத்தொகையில் 497 மில்லியன் கூடுமெனவும் சீனாவில் 341 மில்லியன் கூடுமெனவும் குறிப்பிடப்படுகின்றது.

நைஜீரியாவில் 200 மில்லியனாலும் அமெரிக்காவில் 103 மில்லியனாலும் இந்தோனேசியாவில் 92 மில்லியனாலும் சனத்தொகை அதிகரிக்கலாம் என கருதப்படுகின்றது.

இந்தியா மற்றும் நைஜீரியாவில் அடுத்த நான்கு தசாப்தங்களில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை அதிகரிப்பு கடந்த 40 வருடங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர்ந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-2)

# பரிந்துரைகளை பகுதியளவில் அமுல்படுத்துவதை ஏற்க முடியாது

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையை பகுதியளவில் மட்டும் அமுல்படுத்துவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு பரிந்துரைகளை பகுதி அளவில் அமுல்படுத்துவதனால் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் அரசாங்கம் தொடர்ந்தும் அழுத்தங்களை எதிர்நோக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக அமுல்படுத்த வேண்டிய தார்மீக மற்றும் சட்டப் பொறுப்பு அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழு அறிக்கையின் சில விடயங்களை மட்டும் தெரிவு செய்து அதனை அமுல்படுத்தினால் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்தாமை தொடர்பில் அரசாங்கம் அளிக்கும் விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது 'என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்த முடியாது என அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆணைக்குழு பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள முடியாது

## ஜே. வி. பி. தெரிவிப்பு

உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜே.வி.பி. அறிவித்துள்ளது. ஆணைக்குழு அறிக்கை மற்றும் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமையவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் மெய்யாகவே விசாரணை நடத்தும் நோக்கில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்படவில்லை என ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் அழுத்தங்களை முறியடிக்கும் நோக்கில் ஆணைக்குழு நிறுவப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது முதல் ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சியினர் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்படும் என முன்னர் அரசாங்கம் அறிவித்த போதிலும் அண்மையில் வெளிவிவகார அமைச்சர் முழுமையாக பரிந்துரைகளை அமுல்ப டுத்த முடியாது என தெரிவித்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# த.தே.கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய முடியாது

## தமிழரசுக்கட்சி என்ற நாமமே வேண்டும் என்கிறார் மாவை

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை எக்காரணம் கொண்டும் பதிவு செய்ய முடியாது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரி வித்துள்ளார். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை அரசியல் கட்சியாக பதிவு செய்ய முடியாது என்று என்று தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் வவுனியாவில் கருத்து தெரிவித்த போது மாவை சேனாதிராசா கேள்வி எழுப்பியுள்ளார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வதன் மூலம் பிரச்சினைகளை தீர்த்து கொள்ளலாமே என்று வவுனியாவை சேர்ந்த தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்கு பதிலளித்த அவர்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்வது தொடர்பில் தமிழரசுக் கட்சியில் பெரும்பான்மையானவர்களுக்கு உடன்பாடு இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை கட்சியாக பதிவு செய்வதன் மூலம் தமிழரசுக் கட்சி காலப் போக்கில் இல்லாமல் போய்விடும்.

எனவே, தமிழரசுக் கட்சியின் பெரும்பாலானவர்களின் விருப்பத்திற்கு மாறாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை பதிவு நடவடிக்கைக்கு உட்படுத்த முடியாது என்று மாவை சேனாதிராசா உறுதிபட தெரிவித்திருக்கிறார்.

(அ-2)

# வவுனியாவில் இந்தியர் கைது

வவுனியா நகரில் அனுமதிப் பத்திரமின்றி நடைபாதை புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய பிரஜை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் அனுமதிப்பத்திரமின்றி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர் வவுனியா நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(அ-2)

# பொதுக்கூட்டம்

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார்.

எனவே, இக் கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2)


**போலிகள் எச்சரிக்கையாக இருக்கவும்**

ஆகாசவாணி செய்திகள்
வாசிப்பவர்கள் வரதராஜன்

பிழையானது | சரியானது

1. பொன்னான மேனியும்
2.பொலிவான கூந்தலையும் தந்து
3.சகல தேகரோக நிவாரணியாகத் திகழும்

சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில் போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தை தடுக்க தற்போது தைலப்போத்தலின் மேல்மூடி கண்ணைக்கவரும் வர்ணமூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை பொறிக்கப் பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளை களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே.

பீளேன் மூடித்தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித்தைலம் வாங்கும்போது வர்ண மூடி யுடன் சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதிசெய்யப்பட்ட பெட்டியை திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

*குறிப்பு:- போலிகளின் நடமாட்டம் வன்னிப்பகுதியில் அதிகமாக உள்ளதால் வன்னிமக்கள் இதை கருத்திற்கொண்டு கூடிய கவனம் எடுக்கவும்.*

Manufatured By:
SITHARA PRODUCT,
Puttalam Road, Chilaw
(Reg.No:6382)AR/PR/No.228

யாழ். மாவட்ட ஏக விநியோகத்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:0212222567
(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில்)

(போலிகளை விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றோம்.

(8125)



**WHAT NEXT AFTER YOUR O/L?**

நீங்கள் A/L செய்வதற்கு தகைமை பெற்றுள்ளீர்களா?

UNIQUE OPPORTUNITY TO BECOME A YOUNG PROFESSIONAL

ENGLISH MEDIUM
A/L Commerce Stream
with AAT
*to go beyond your expectation*

பாடநெறி முடிவில்
- பல்கலைக்கழகம் ஒன்றில் உங்களது பட்டப்படிப்புக்களை தொடர்வதற்கான வாய்ப்பு.
- விலக்களிப்புக்களுடன் CIMA, ICASL, CIM, ACCA போன்ற தொழில்சார் கற்கைநெறிகளை தொடர்வதற்கான வாய்ப்பு.
- பகுதிநேர வேலைவாய்ப்புக்களுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் உயர்கல்வியினை தொடர்வதற்கான வாய்ப்பு.
- Management மற்றும் Accounting துறைகளில் உடனடியாக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு.
- மத்திய கிழக்கு நாடுகளில் சிறந்த தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு.

ACCOUNTING PACKAGES
FREE COMPUTER SOFT SKILLS

Experienced Panel of Lecturers
Modern Teaching Method
Affordable Course/Term Fee
Student Friendly Environment
No Extra Classes or Tuition need

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தை 0777 222 529 உடன் தொடர்பு கொண்டு அல்லது SMS செய்து பெற்றுக் கொள்ளவும்.

GOLDEN COLLEGE CITY CAMPUS
548, Peradeniya Road, Kandy.
0812 20 55 44/0716 032 967
HOTLINE 0777 222 529

A training institute registered with the TVEC under P09/0148

(8111)

# வேலை தேடுவோரின் நன்மை கருதி இணையத்தளம் ஆரம்பிப்பு

(கொழும்பு)

கொரிய மொழி பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் தம்மைப் பற்றிய விபரங்களையும் வேலை ஒப்பந்தங்களையும் *www.eps.go.kr* என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம். இணையத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பது போல் வேலை தேடுபவர் ஈமெயில் கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலம் கொரிய மனிதவள மையத்தில் வேலை ஒப்பந்த விபரங்களை பெறமுடியும்.

விண்ணப்பகாரருக்கு பின் இலக்கமொன்று வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இணையத்தளத்தை பார்வையிடலாம். கொரியாவில் வேலைதேடுபவர்கள் பாகுபாடின்றியும் நீதியாகவும் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்காக வெளிநாட்டு தொழில் அமைச்சர் டிலான் பெரேராவால் முன்னெடுக்கப்பட்ட திட்டமாகும்.

தமது தனியான முன்னேற்றம் பற்றி எல்லா விண்ணப்பதாரரும் வெளிப்படையாக இத்திட்டத்தின் மூலம் தகவல்களைப் பெறலாம்.

பணத்திற்கான வேலை பெற்று தருவதாக கூறும் இடைத்தரகர்களிடம் ஏமாற வேண்டாம் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கோருகின்றது.

இப்பணியகத்தின் அறிக்கையின் படி 2011 ஆம் ஆண்டு ஒக்டோபரில் கொரிய மொழியில் சித்தியடைந்த 9 ஆயிரத்து 998 பேரில் 5 ஆயிரம் பேர் ஏற்கனவே வேலைக்கு சென்று விட்டார்கள்.

2010 ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்த இன்னும் வேலை வாய்ப்பின்றி இருப்போருக்கே முன்னுரிமை வழங்கப்படும். தற்போது 25 ஆயிரம் இலங்கையர்கள் கொரியாவில் பணிபுரிகின்றனர்.

இலங்கைக்கும் தென்கொரிய அரசுகளுக்குமிடையிலான ஒப்பந்தத்தின் மூலமே தொழிலாளர் வேலைக்குச் தெரிவு செய்யப் படுகின்றார்கள். (அ-2)

# அமைச்சரவை பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கை அமைச்சரவையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முக்கிய அமைச்சர்களின் பதவிகளில் மட்டும் மாற்றம் ஏற்படுத்தப் படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அனைத்து அமைச்சர்களின் பதவிகளிலும் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது எனவும் பத்து அமைச்சர்களின் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த மாற்றங்கள் தொடர்பில் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை அமைச்சின் செயலாளர் பதவிகளிலும் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

விரைவில் அமைச்சர் மற்றும் அமைச்சு செயலாளர் பதவிகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# மகாதேவா ஆச்சிரமத்தில் தையல் பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

விதவைகளினதும் யுவதிகளினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்தில் தையல் பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிறுவர் இல்ல தலைவர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார். இப்பயிற்சிநெறியினை மேற்கொள்ள விரும்புவர்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் ஜெயந்திநகர் கிராம அலுவலரிடம் பதிவுகளை மேற்கொள்ளும் படி அவர் கேட்டுள்ளார். (அ)





எந்தவொரு சென்றல் பினான்ஸ் சேமிப்புக் கணக்கிலும் (CF எக்ஸெல் சேமிப்புக் கணக்கு மற்றும் CF சிறுவர் சேமிப்புக் கணக்கு தவிர) 2012 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் 5,000/- ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புச் செய்வதன் மூலம் பாங்கொக்கில் சுற்றுலா மேற்கொள்ள ஒரு விமானப் பயணச் சீட்டை முதல் பரிசாகவோ அல்லது ரூ.10,000 பெறுமதியான 10 வெற்றி வாய்ப்புகளில் ஒன்றையோ அல்லது 200 ஆறுதல் பரிசுகளையோ வெல்லக்கூடிய வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது. வைப்புத் தொகை அதிகரிக்கும் அளவுக்கு வெற்றிபெறும் வாய்ப்புக்களும் அதிகரிக்கும். (ஒவ்வொரு ரூ.5,000 க்கும் வெற்றி வாய்ப்புகள்)

குறைந்தபட்ச கணக்கு மீதியாக 5000/- ரூபாவை 2012 ஏப்ரல் 30ஆந் திகதி தொடக்கம் 3 மாதங்களுக்குப் பேணி வருவது இந்தச் சீட்டிழுப்பில் கலந்துகொள்வதற்கான மிகக்குறைந்த தகைமையாகும். சீட்டிழுப்பு: 2012 ஓகஸ்ட்

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் - சேதனா (நகர அலுவலகம்) 077 236 8748 அல்லது தம்மிக (தலைமை அலுவலகம்) 077 236 8749 அல்லது நாடு பூராவுமுள்ள எமது கிளைகளுக்கு சமுகமளிக்கவும்.

A+(lka) பிட்ச் ரேட்டிங் சான்றிதழ் பெற்ற வங்கியல்லாத ஒரேயொரு நிதி நிறுவனம்.


*நிபந்தனைகள் அடங்கும்

WP/GT/3508 (சி-6290)

சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
தலைமை அலுவலகம்: இல. 84 ராஜ வீதி, கண்டி
நகர அலுவலகம்: இல. 270 வொக்ஷோல் வீதி, கொழும்பு 2
மின்னஞ்சல்: savings@cf.lk இணையத்தளம்: www.cf.lk

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி தொழிற்சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் உரிமமளிக்கப்பட்ட ஒரு நிதிக் கம்பனியாகும். வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக 1957 டிசம்பர் 05 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

# பயிற்சியில் ஈடுபட்ட ஜெட் விமானம் நொருங்கியது



விர்ஜீனியாவில் அடுக்குமாடி கட்டடத்தின் மீது கடற்படையை சேர்ந்த ஜெட் விமானம் மோதி நொருங்கியது. இதனால் பதற்றம் ஏற்பட்டது.

கடந்த 2001 செப்டெம்பர் 11ஆம் திகதி அல் கொய்தா தீவிரவாதிகள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்த உலக புகழ்பெற்ற இரட்டைக்கோபுரங்கள் மீது விமானங்களை மோதி தகர்த்தனர். அதன்பின் அமெரிக்காவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

அங்கிருந்தவர்கள் தீவிரவாதிகள் தாக்குதலாக இருக்குமோ என்ற பீதியில் அலறி ஓடினர். கட்டடத்தில் இருந்து கரும்புகை வெளியேறியது. உடனடியாக சம்பவ இடத்திற்கு பாதுகாப்புப் படை வீரர்கள் விரைந்து வந்துமீட்பு நடவடிக்கையில் இறங்கினர்.

தீவிர விசாரணையில் அமெரிக்க கப்பற்படையைச் சேர்ந்த ஜெட் விமானம் என்பதும் அதில் வந்த விமானமோட்டிகள் பரசூட்டில் தப்பியதும் தெரியவந்தது. விர்ஜீனியாவில் அமெரிக்காவின் கப்பற்படை முகாம் உள்ளது. இங்கு பயிற்சியில் ஈடுபட்ட போது ஜெட் விமானம் விபத்தில் சிக்கியதாக கூறப்படுகிறது. (அ-2)

# மாலியில் இராணுவப்புரட்சி ஓய்ந்தது; நாட்டில் சுதந்திரம் மலர்ந்தது

(பாமாகோர்)

சமீபத்தில் இராணுவ புரட்சி நடந்த மாலி நாடு இரண்டாக உடைந்தது. நாட்டின் வடக்கு பகுதியை கைப்பற்றிய கிளர்ச்சி அமைப்பினர் சுதந்திரம் அடைந்து விட்டதாக நேற்று முன்தினம் அறிவித்தனர்.

ஆபிரிக்காவின் மேற்கு பகுதியில் அல்ஜீரியா அருகே மாலி என்ற சிறிய நாடு அமைந்துள்ளது. இந்த நாட்டின் வடக்கே துவாரக் இன மக்கள் அதிகம் வசிக்கின்றார்கள்.

இவர்கள் அசாவாத் விடுதலை இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கி கிளர்ச்சியில் இறங்கினர். சில தீவிரவாத அமைப்புக்களின் ஆதரவுடன் போராடினார்கள்.

கடந்த ஜனவரி மாதத்தில் வடக்கு பகுதியில் கிளர்ச்சி செய்து பல ஊர்களை கைப்பற்றினர். இதனால் இராணுவத்தினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் போர் நடந்தது. இதில் ஏராளமான இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் இராணுவத்தினர் திடீர் புரட்சி நடத்தி ஜனாதிபதியை விரட்டி விட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினார்கள். தீவிரவாதிகளை ஒடுக்க நவீன ஆயுதம் கொடுக்கவில்லை என கூறி இந்த புரட்சி நடைபெற்றது. எனினும் கிளர்ச்சியாளர்களை இராணுவத்தால் ஒடுக்க முடியவில்லை. கடந்த சில நாட்களாக வடக்கு பகுதியில் கடும் சண்டை நடந்தது.

இதில் கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியது. அங்குள்ள முக்கிய நகரங்களான கிடால், காஓ, திம்புக்து ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இதனை அடுத்து வடக்குப்பகுதி சுதந்திரம் அடைந்து அசாவத் என்ற நாடு உருவாகிவிட்டதாக நேற்று முன்தினம் அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளரும் கிளர்ச்சி படை தலைவருமான பில்லால் அக் அஷீரி அறிவித்தார்.

எங்கள் இன மக்களை மாலி அரசாங்கம் அடக்கி ஒடுக்கி, உரிமைகளை வழங்க மறுத்து வந்தார்கள். ஊழல், மோசமான நிர்வாகத்திற்கு எதிராக எங்களுடைய 50 ஆண்டு போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. எங்களுடைய ஆசாவாத் நாடு முழுமையாக சுதந்திரம் அடைந்து விட்டது என்று தெரிவித்தார்.

இதற்கு உலக நாடுகளும் ஐ.நா. சபையும் அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)

# இந்திய தேசத்தின் கடற்படையில் 5 அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்கள்

அடுத்த சில ஆண்டுகளில் இந்திய கடற்படையில் 5 புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் செயற்படும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்ட ஐ.என். எஸ்சக்ரா அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் முறைப்படி கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியக் கடற்படையில் அணுசக்தியில் இயங்கும் 5 நீர்மூழ்கிக் கப்பல்கள் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் சேர்க்கப்படும். இவற்றில் 2 ரஷ்யாவில் இருந்து வாங்கப்படும். 3 கப்பல்கள் இந்தியாவின் சொந்தத் தயாரிப்பாக இருக்கும். இந்திய கடல் எல்லையைப் பாதுகாக்கும் பணியில் இக்கப்பல்கள் ஈடுபடுத்தப்படும். இது தொடர்பான செயற்றிட்டங்களை மத்திய அரசு ஏற்கனவே தொடங்கிவிட்டது.அடுத்த சில ஆண்டுகளில் நமது கடற்படை மிக வலிமையுள்ளதாக உருவெடுக்கும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரஷ்ய தூதர் அலக்சாண்டர் எம். கடாகின் கூறுகையில்,

இந்தியாவுடன் ரஷ்யா வெகு சிறப்பான நட்புறவைக் கொண்டுள்ளது. இந்தியாவின் தேவைகள் அனைத்தையும் ரஷ்யா பூர்த்தி செய்யும் என்றார்.

இந்திய தயாரிப்பு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ். அரிஹந்த் விரைவில் சோதனையில் ஈடுபடுத்தப்பட இருக்கின்றது. நீர்மூழ்கி கப்பல்கள் மட்டுமல்லாது இந்தியா நவீன ரக பாலோ ஆன் ஏவுகணைகளைத் தயாரிக்கவும் ரஷ்யா உதவியளித்து வருகின்றது.

இப்போது இந்தியாவிடம் 10 இற்கும் மேற்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன. இவை அனைத்துமே டீசல், மின்சக்தியில் செயற்படக்கூடியவை. இதுதவிர பிரான்சுடன் இணைந்து 6 ஸ்கார்ப்பியோ வகை நீர்மூழ்கிக் கப்பல்களை இந்தியா தயாரித்து வருகின்றது என்றார். (அ-2)



ஹபீஸ் சயீத்தின் தலைக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசுத்தொகையாக அறிவித்த அமெரிக்காவை எதிர்த்து பாகிஸ்தான் ராவல்பிண்டி நகரில் அமெரிக்க கொடியை எரிக்கமுயலும் ஜமாத் உத்தவா இயக்கத்தினரைப் படத்தில் காணலாம்.

# கோபி அனானின் அறிவுரைப்படி சிரியாவில் யுத்த நிறுத்தம்?

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சி நடைபெறுகின்றது. இதை தடுக்க ஐ.நா. பாதுகாப்பு சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கு சீனா, ரஷ்யா நாடுகள் முட்டுக்கட்டை போட்டன.

இதனை அடுத்து ஐ.நா. சார்பில் முன்னாள் பொதுச்செயலாளர் கோபி அனான் சிறப்பு தூதராக நியமிக்கப்பட்டு சமரச திட்டம் ஒன்றை உருவாக்கினார். இதை சிரிய ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டார்.

அதன்படி எதிர்வரும் 12 ஆம் திகதி அதிகாலை 6 மணி முதல் போர் நிறுத்தம் அமுலுக்கு வருகின்றது. இது பற்றி கோபி அனான் கூறுகையில்,

இது பற்றி அரசாங்கம் மற்றும் எதிர்த்தரப்பு கொமாண்டர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டது. எனவே இரு தரப்பினருக்கும் எத்தகைய ஆயுதங்களையும் கையாளக் கூடாது என்று தெரிவித்தார்.

ஐ.நா. சபைக்கான சிரியா தூதர் பஷர் ஜபாரி கூறுகையில்,

இந்த போர் நிறுத்தத்தில் பொலிஸார் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் பொதுமக்களுக்கு பொலிசாரே பாதுகாப்பு அளிக்க வேண்டியுள்ளது என்று கூறினார். (அ-2)

# தென்சீனக்கடல் உலகநாடுகளின் சொத்து; எந்தவொரு நாடும் மிரட்டல் விட முடியாது

## கிருஷ்ணா சீனாவிற்கு பதிலடி

நாங்கள் எண்ணெய் ஆய்வுமேற்கொண்டுள்ள தென்சீனக்கடல் பகுதி தனிப்பட்ட எந்த நாட்டுக்கும் சொந்தமானது அல்ல அது உலக நாடுகளின் சொத்து. இந்த விடயத்தில் இந்தியாவுக்கு எந்த ஒரு நாடும் மிரட்டல் விடுக்க முடியாது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணா சீனாவின் மிரட்டலுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

சீனாவின் தெற்கு கடல் பகுதியில் உள்ள சில தீவுகளை தனக்கும் சொந்தமானது என சீனா கூறி வருகின்றது. பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகளும் இந்த பகுதிகளுக்கு உரிமை கொண்டாடி வருகின்றன. சர்ச்சைக்குரிய அந்தப் பகுதியில் வியட்நாமுடன் இணைந்து இந்தியா எண்ணெய் ஆய்வுப் பணிகளை நடத்தி வருகின்றது. இதற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. எங்களுக்கு சொந்தமான கடல் பகுதியில் எண்ணெய் ஆய்வுப் பணி மேற்கொள்ள இந்தியாவுக்கு உரிமை இல்லை. உடனடியாக அங்கிருந்து வெளியேறாவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என இந்தியாவுக்கு சீன அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

இந்நிலையில் வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா நேற்று முன்தினம் கூறியதாவது, வியட்நாமுடன் இணைந்து நாங்கள் எண்ணெய் ஆய்வு நடத்தும் கடல்பகுதி எந்த ஒரு தனிப்பட்ட நாட்டுக்கும் சொந்தமான பகுதி அல்ல. உலக நாடுகளுக்கு சொந்தமான பகுதி. இந்த விடயத்தில் எந்த ஒரு தனிப்பட்ட நாடும் இந்தியாவுக்கு மிரட்டல் விடுக்க முடியாது. வர்த்தக பயன்பாடு தொடர்பான விடயத்தில் ஆய்வு நடத்துவதில் எந்த ஒரு நாடும் தலையிட முடியாது.

வர்த்தக பயன்பாட்டுக்காக இந்த கடல் பகுதியைப் பயன்படுத்தலாம் என்பதை அனைத்து ஆசிய நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்த விவகாரத்தால் இந்தியா-சீனா நாடுகளுக்கு இடையேயான உறவில் எந்த பாதிப்பும் ஏற்படாது என அவர் கூறினார். (அ-2)

# மலாவி ஜனாதிபதி காலமானார்



தென்ஆபிரிக்க நாடான மலாவியின் ஜனாதிபதி வா முத்தாரிகா (வயது78) மாரடைப்பால் நேற்று முன்தினம் காலமானார்.

அவருக்கு கடந்த வியாழக்கிழமை இரவு நெஞ்சுவலி ஏற்பட்டதாகவும் உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர் நெஞ்சுவலியால் உயிரிழந்தார் என ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது. (அ-2)

# விமான நிலையத்திற்கு கெம்பிகவுடா பெயர்

பெங்களூரில் உள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு கெம்பி கவுடா பெயர் வைக்க மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தியாவில் வளர்ந்துவரும் பெரும் நகரங்களில் பெங்களூரும் ஒன்றாகும். இந்த நகரை நிறுவியவர் கெம்பிகவுடா. இவரது பெயரை பெங்களூர் சர்வதேச விமான நிலையத்திற்கு வைக்கவேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. இதற்கு அனுமதி அளிக்கப்பட்டுவிட்டதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. அடுத்த மத்திய கேபினெட் அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது. (அ-2)

பரமபிதாவே ! என்பொருட்டு இவர்களை மன்னியுங்கள்.

~ யேசுநாதர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கோட்சே கொன்றது காந்தியை இலங்கை கொன்றது அகிம்சையை

அகிம்சா மூர்த்தி என்று உலகப் புகழ்பெற்ற அண்ணல் மகாத்மா காந்தி இந்த வையகத்திற்கு அகிம்சையின் பெருமையை புகட்டிய உத்தமர்.

அவரின் அகிம்சைப் போராட்டம் இந்திய தேசத்திற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தது என்பதற்கு அப்பால், விடுதலைப் போராட்டத்திற்குப் பின் அரசியலில் பிரவேசித்து ஆட்சிப் பதவியை பெற்றுக் கொள்ளாமல், ஓர் அகிம்சைவாதி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை தன் வாழ்க்கையில் காட்டிநின்றதனாலேயே காந்தி, மகாத்மாவாகப் போற்றப்பட்டார்.

அத்தகைய் உயர்வுமிக்க காந்தியை கோட்சே என்ற கொடியவன் சுட்டுக் கொன்றான்.

பாரத தேசத்திலிருந்து பாகிஸ்தான் பிரிபடுவதை ஏற்றுக்கொள்ளாத கோட்சே, காந்தியை சுட வேண்டும் என்று நினைத்தான் போலும்.

எனினும் கோட்சேயின் துப்பாக்கியிலிருந்து பீறிட்ட குண்டுகள் காந்தியை துளைத்தபோது தான் காந்தி மகாத்மாவாகினார்.

துப்பாக்கி ரவைகள் காந்திய துளைத்தபோது ரகுபதி ராகவ ராஜாராம் பதீதபாவன சீதாராம்... ராம்... ராம் என்ற ராமநாமத்தை காந்தி உச்சரித்தது மட்டுமல்ல தன்னைக் கொன்றவனை மன்னிக்கும்படியும் கூறிக்கொண்டார்.

உயிர்வாழும் காலத்தில் காந்தியின் பெருமையை கோட்சே உணராதவனாக இருந்திருக்கலாம். ஏன்? பாரத மக்களில் பலர் காந்தியின் அகிம்சையை தெரியாதவர்களாக்வும் இருந்திருக்கலாம்.

ஆனால் காந்தி உயிரிழந்த கணத்திலேயே அவர் உலக மக்களால் மகாத்மாவாக உணரப்பட்டார். அமெரிக்கதேசம் மகாத்மா காந்தியின் உருவச் சிலையை தன்மண்ணில் நிறுவிக் கொண்டது.

காந்தியை கௌரவப்படுத்துவதற்காக என்று யாரும் நினைத்து விடக்கூடாது. மாறாக காந்தியின் சிலையை நிறுவி அமெரிக்க மக்களுக்கு அகிம்சையை உணர்த்த அத்தகையதொரு ஏற்பாடு. இவ்வாறாக உலகம் உணர்ந்து கொண்ட மகாத்மா காந்தியின் சிலையை மட்டக்களப்பில் உடைத்தார்கள் என்பதை நினைக்கும்போது இதயம் வெடிக்கும்போல் இருக்கிறது.

உலகம் நாடுகள் அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்தியின் சிலையை தங்கள் மண்ணில் நிறுவி அதனூடு அகிம்சையைப் போதிக்கும் வேளையில், இலங்கைத் தீவில் மட்டக்களப்பு மண்ணில் காந்தியின் சிலை உடைக்கப்பட்டுள்ளதெனில் அதன் பொருள் என்ன?

ஓ! காந்தியை சுட்டுக்கென்ற கோட்சேயைவிட காந்தியின் சிலையை உடைத்ததன் மூலம் இலங்கை பெரும் கொடூரத்தை செய்துவிட்டது.

அண்ணலே! சிலை உடைபட்ட உத்தமர்களே! உங்கள் சிலைகளை உடைத்த அறியாமையுடைய இந்த ஆத்துமாக்களை மன்னித்தருள்க.

# தமிழனிடம் இருப்பதை சுரண்ட நினைக்கும் அரசிடம் நாம் எதனை கேட்கமுடியும்

## எம்மை நாமே பாதுகாப்போம் என்கிறார் சுரேஸ்

'நாங்கள் நினைத்ததைத்தான் செய்வோம்' என மார்தட்டும் அரசிடம் நாம் கேட்பதனை செய்வார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. இவ்வாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இயற்கைப் பண்பாட்டு மரபுவளப் பாதுகாப்பு மையத்தினால் வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் அனைவருக்கும் தெரியும் நடந்து முடிந்த யுத்தத்தினால் நாம் வாழ்கின்ற பிரதேசம் யாழ்ப் பாணம் மாத்திரமல்லாமல் வடக்கு, கிழக்கு மாகாணம் முழுவதும் மிகக் கொடூரமாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம்.

இயக்கச்சியில் இருந்து நீங்கள் வரும்பொழுது அவதானித்திருப்பீர்கள் தலையில்லாமல் பல இலட்சக் கணக்கான பனைமரங்கள் இராணுவத்தினரின் தேவைக்காக வெட்டப்பட்டன.

தற்பொழுது திருமுறிகண்டியிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு இராணுவத்தின ரின் குடியிருப்புகளாக மாறிவருகின்றன.

ஏற்கனவே எமது பிரதேசம் அழிந்து போனபகுதி. இவற்றைக் காப்பாற்ற வேண்டும் என்ற எவ்வித சிந்தனையும் இன்றி அரசும் இராணுவமும் தாங்கள் நினைத்தவற்றை செய்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி நடைபெறுகின்றது என்று அரசு கூறுகின்றது. இவ் அபிவிருத்தியில் வீதிகள் முக்கியமானவை. கண்டிவீதி, ஏ-9 வீதி, பலாலி வீதி, கே.கே.எஸ்.வீதி ஆகிய வீதிகளில் பாரிய பழம்பெரும் மரங்கள் வெட்டப்பட்டு வெட்டப்படும் அம்மரங்களுக்கான பதிலீட்டு புதிய மரங்கள் நாட்டுவதற்கான வேலைத்திட்டம் இதுவரையில் நடைபெறவில்லை.

எங்கு மரங்கள் வெட்டப்படுகின்றதோ அப்பிரதேச மக்களுக்கு மரங்களினை வழங்கி நாட்டுவதற்கான திட்டம் அவர்களிடம் கிடையாது.

அவர்களைப் பொறுத்தவரையில் வீதிபோடுவதுதான் நோக்கம். மரங்கள் அழிவது தொடர்பில் எவ்வித கவலையும் கிடையாது.

சூழல் பிரச்சினை முக்கியமானது, பாரதூரமானது.ஆகவே அதற்கான அதிகாரங்களினை மாகாணங்களுக்குக் கொடுக்கமுடியாது எனக்கூறும் அரசு கண்மூடித்தனமான முறையில் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள அத்தனையையும் அழிப்பதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

ஆகவே சூழல் என்று சொல்லப்படும் போதும் தமிழ், சிங்களம் என்ற பாகுபாடு காட்டப்படுகின்றது.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் எமது சூழலில் கூடுதலான அக்கறை செலுத்த வேண்டும், அரசினை விடுங்கள் இது எமது பூமி, எமது மண், எமது சூழல் இதனைக் காப்பாற்ற வேண்டியவர்கள் நாங்கள்தான்.

உங்களது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களினை நாட்டுங்கள். இதனால் உங்களுக்கு, உங்கள் குடும்பத்திற்கு, உங்கள் பிரதேசத்திற்கு , ஒட்டுமொத்த நாட்டிற்குப் பிரயோகம் உள்ளது.

நாங்கள் யாரிடமும் எதையும் எதிர்பார்த்து இருக்கக்கூடாது. அரசு எங்களிடமிருந்து எதைப் பிடுங்கலாம் என எதிர்பார்க்கின்றதோ தவிர எங்களுக்கு என்ன கொடுக்கலாம் என்பது சிந்திப்பதில்லை.

ஆகவே எம்மைப் பொறுத்த வரையில் நாம் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமாக இருந்தால் பல படிகளினை நாம் தாண்டவேண்டியுள்ளது.

பெரியவர்கள், சிறியவர்களினை வழிப்படுத்தவேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-4)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசு எவ்வித உதவியும் வழங்கவில்லை

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசாங்கத்தால் எவ்விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. இப்பிரதேசத்தில் 13 ஆயிரத்து 159 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விதவைகள் இருக்கின்றனர். அவர்களுக்கு எவ்விதமான நிவாரணமும் அரசாங்கத்தால்வழங்கப்படவில்லை. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லை என உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் இணைத் தலைவர் கலாநிதி சரோஜா போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் ஊடகவியலளர் சந்திப்பு வவுனியா நெல்லி ஸ்டார் ஹோட்டலில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முகாம்களில் வாழும் மக்கள் மீள் குடியேற்றப்படாமையினால் அவர் கள் அன்றாட தொழிலை மேற்கொள்ளும் வாய்ப்பும் இல்லாமல் இருக்கின்றார்கள். இந்த மண்ணில் வாழும் எந்தவொரு மனிதனும் அடிமை இல்லை. நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை தரத்தை யுத்தத்தினால் சீரழிந்த நிலையில் யுத்தம் முடிபடைந்து நான்கு வருடமாகும் சந்தர்ப்பத்திலும் அவர்களின் சுமுகமான நிலைக்கு ஏற்பாடுகள் எடுக்கப்படவில்லை.

வளர்ச்சி அல்லது அபிவிருத்தி என்ற பெயரால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அரசாங்கத்தினுடைய தேவை அவர்களுடைய சொரூபத்தை வெளிப்படுத்தி சர்வதேசத்திற்கு முகம் காட்டுவதற்கான அபிவிருத்தியாகவே இருக்கின்றது. அதாவது நெடுஞ்சாலை அமைப்பு வீதி புனரமைப்பு என்பன அரசாங்கத்தின் சொரூபத்தை காப்பாற்றும் செயற்பாடுகளே தவிர மக்களுடைய வாழ்க்கை தரத்திற்கான ஆதரவும் வழங்கப்படவில்லை.


பெண்களாக நாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. இதை இலங்கையில் உள்ள சகலருக்குமான பிரச்சினையாகவே பார்க்கின்றோம். அதில் ஒரு பகுதியாக வடக்கினையும் நோக்குகின்றோம். ஆனால் பிரச்சினைகள் வேறுபடலாம். ஆனால் அனைத்து பெண்களும் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. கலாசார, பொருளாதார, கல்வி மற்றும் பாலியல் ரீதியாகவும் அவர்கள் நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிலையில் பெண்கள் இயக்கம் என்ற நிலையில் நாம் பெண்களுக்கான பிரச்சினைகளை கண்காணித்து எவ்வாறு விழிப்புணர்வை ஏற்படுத்துவதென்றும் கருத்தியல் ரீதியாக எவ்வாறு செயற்படுவதென்ற முக்கிய குறிக்கோளுடன் நாம் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம்.

யுத்தத்தின் பின்னரும்கூட மக்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகவும் தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாகவும் ஏமாற்றப்படும் நடவடிக்கைகளும் சிறுவர்கள் கடத்தப்படுவதும் அந்த சிறுவர்களை சிறுவர் விபச்சாரத்திற்கு உள்ளாக்கும் நிலையையும் நாம் நாளுக்கு நாள் காண்கின்றோம் என்றார். (அ-2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### இன்பம் முப்பது

எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே
ஏதி லார்பால் இரங்குதல் இன்பமே
பொங்கு கோபத்தைப் போக்குதல் இன்பமே
புவியின் ஆசையை நீக்குதல் இன்பமே
தங்கும் யோகத் தமருதல் இன்பமே
தானே தானாய்த் தழைத்திடல் இன்பமே
இங்கெ னக்கின்பம் எளிதில் விளக்கிய
என் குருபர புங்கவ சிங்கமே



# தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதத்திற்கு துணைபோனவர்கள் அல்ல- அமைச்சர் றிசாத்

(கொழும்பு)

தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாத செயற்பாடுகளுக்குத் துணை போனவர்கள் அல்லர். முஸ்லிம்களுடன் மிகவும் நெருக் கமாக செயற்பட்டவர்கள், முஸ்லிம்கள் வெளி யேற்றப்பட்ட போது மனதுக்குள் அழுதார்கள் என வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் கைத்தொழில் வணிகத் துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்து ள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு அபி விருத்தித் திட்டங்களை நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண் டவாறு கூறினார்.

வடக்கில் அதிக பாதிப்புக்குள்ளான மக்கள் வாழும் பிரதேசம் முல்லைத்தீவாகும். சுனாமி அனர்த்தம் மற்றும் யுத்த சூழல் என்பன இதற் கான காரணங்களாகும்.

இன்று பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படு கின்றன. அது மக்க ளின் வாழ்வுரிமையை மேலும் வலுப்படுத்தும் ஒன்றாகும். தமிழ் பேசும் மக்கள் நாம் என்ற பார்வை இருக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 22 சதவீ தமான பிரதேசங்கள் மின்சாரத்தைக் கண் டுள்ளன. ஏனைய பிரதேசங்கள் அதனைப் பெற்றுக் கொள்ளவுள்ளன. இவ்வருட நிறைவில் பெரும் எண்ணிக்கை யிலான கிராமங்கள் மின்சாரத்தைப் பெற்றுவிடும். அத்தோடு மக்கள் மத்தியில் காணப்படும் இருண்டயுகம் மாறி வெளிச்சத்தின் பாதையில் அவர்களது செயற்பாடுகள் அமையப் போகின்றன.

முல்லைத்தீவு மாவட்டம் ஒரு முன்னுதார ணம் மிக்க மாவட்டமாகும். சகோதர முஸ்லிம் மக்கள் மீள்குடியேற வந்த போது அவர்களை வரவேற்று தேவைகளைப் பெற்றுக் கொடுக்க முன்வந்தனர். அதே போல் அதிகாரிகளும் மிகவும் நேர்மைத் தன்மை கொண்டவர்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் கூறினார். (அ-2)

# ரஷ்யாவை நோக்கி தனது பார்வையை திருப்புகின்றதா எயார் லங்கா சேவை?

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா எயார் லைன்ஸ் நிறுவன த்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 21 பயணிகள் விமானங்களுக்கு இலங்கை அரசு 7.7 மில்லியன் டொலர்களை ஒவ் வொரு மாதமும் செலுத்துவதாக விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜெயரட்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கேள்வி நேர விவாதத் தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 2008 இலிருந்து 2011 வரையான காலப்பகுதியில் இந்நிறுவனம் பெற்ற மொத்த வருமானம் 2இலட்சத்து 16 ஆயிரத்து 138 மில்லியன் ரூபாய்களாகும். அதாவது ஆயிரத்து 724 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னத்திலிருந்து பெறப்படும் எண்ணெய்க் கான பணத்தைச் செலுத்துவதில் சிரம ப்படும் இந்நிறுவனம் திறைசேரியில் உத வியை நாடுவதாக அறியப்படுகின்றது.

இந்நிலையில் மத்தியகிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொரு ளாதார சிக்கல் நிலை காரணமாக வருமா னத்தை இழக்கும் எயார் லங்கா ரஷ்யாவை நோக்கி தனது பார்வையைத் திருப்புவ தாக கூறப்படுகின்றது.

நட்டத்தில் இயங்கும் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனமானது அண்மையில் ஐக்கிய அரபுக் குடியரசின் வங்கி ஒன்றி டமிருந்து கடனாக 175 மில்லியன் டொலர் களைக் கேட்டிருந்தது. இலங்கை அரசு அதற்கான உத்தரவாதத்தை அளித்தால் மட்டுமே அக்கடனைக் கொடுப்பதாக அவ் வங்கி பதிலளித்தது. இன்னமும் அக்கட னைப் பெற முடியாமல் எயார் லங்கா தவிப் பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

# கடலில் குளிக்கச் சென்ற இளைஞனை காணவில்லை

(கொழும்பு)

காலி தல்பே பிரதேசத்தில் கடலில் மூழ்கி ஒருவர் காணாமற் போயுள்ளார். குறித்த பிரதேசத்தின் ஹோட்டல் ஒன்றில் இடம்பெ ற்ற பிறந்ததின வைபவத்தில் கலந்து கொண்ட சிலர் கடலில் குளிக்கச் சென்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மூவர் கடல் அலையில் அள்ளுண்டு செல்லப்பட்டதா கவும் அதிலிருந்து இருவர் காப்பாற்றப்ப ட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடல் அலையின் தாக்கம் அதிகரித் துள்ளதால் காணாமற் போன வரை தேடும் பணிகளுக்கு தடையேற்பட்டுள்ளதாக குறிப் பிடுகிறார். காலி மிலித்துவ பிரதே சத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளை ஞனே காணாமற் போயுள்ளார். (அ-2)

# முதலாம் அரையாண்டு பரீட்சைகள்-2011

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மனித வள முகாமை த்துவ டிப்ளோமா கற்கை நெறி முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2011 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 9 ஆம் முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பதிவாளர் அறிவித்துள்ளார். (அ)



முல்லைத்தீவு இலங்கை விமானப் படையினரால் புனரமைப் புச் செய்யப்பட்ட வற்றாப் பளை உதயசூரியன் முன்பள்ளிக் கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விமானப் படை கட்டளைத் தளபதி விங் கொமாண்டர் பி.பி. எச். பின்னகொட நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் அருகில் உதய சூரியன் முன்பள்ளி ஆலோசகர் வே. இரத்தின ராஜா நிற்பதையும் படத்தில் காணலாம்.



உங்கள் கனவுகள் நனவாக
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சித்திரை புத்தாண்டில் நடைபெறும் கொடுக்கல் வாங்கலில் கலந்து கொள்வதற்கு வருடத்தின் 365 நாட்களும் திறந்திருக்கும் எமது வங்கி கிளையொன்றிற்கு வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

எமது கிளைகள் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்ரல் 14 ஆம் திகதியன்று மு.ப 9.00 மணி முதல் பி.ப 2:00 மணி வரை திறந்திருக்கும்



| சுவர் கடிகாரம் ரூ.5,000* க்கு மேலான வைப்புகளுக்கு | சுடு தண்ணீர் போத்தல் ரூ.25,000* க்கு மேலான வைப்புகளுக்கு | கேத்தல் ரூ.50,000* க்கு மேலான வைப்புகளுக்கு | ட்ரெவலிங் பேக் ரூ.100,000* க்கு மேலான வைப்புகளுக்கு |
|---|---|---|---|


ரூ.500,000* க்கு மேல் வைப்புச்செய்து அனைத்து பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்

அழையுங்கள்: 011 4 711 411
www.nationstrust.com
*இவ் வெகுமதி கையிருப்பு முடியும் வரை மாத்திரமே செல்லுபடியாகும்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

(C-6307)

Nations TrustBank

# இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி




இலங்கை அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

பி.சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் 5ஆவது நாளான நேற்று இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 278 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது. இதனால் இங்கிலாந்து அணிக்கு இரண்டாவது இன்னிங்ஸில் 94 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டன.

இங்கிலாந்து அணி 19.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இத் தொடரில் முதலாவது போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றது. இதனால் 2 போட்டிகள் கொண்ட இத்தொடர் 1:1 என்ற விகிதத்தில் சமனிலையில் முடிபடைந்துள்ளது.

இப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 275 ஓட்டங்களையும் இங்கிலாந்து அணி 460 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.


இலங்கை அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் மஹேல ஜெயவர்த்தன 67 ஓட்டங்களையும், திலான் சமரவீர 47 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்யூஸ் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்களில் கிரேம் சுவான் 106 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு ஓட்டத்தை பெறுவதற்கு முன்னர் டில்சானின் பந்துவீச்சில் அணித் தலைவர் அன்ட்ரூ ஸ்ரொரஸ் ஆட்டமிழந்தார். ஜொனதன் ட்ரொன் 5 ஓட்டங்களுடன் ரங்கன ஹேரத்தின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

எனினும் அலிஸ்ரடயர் குக் 49 ஓட்டங்களையும் கெவின் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பெற்றனர். முதல் இன்னிங்ஸில் 151 ஓட்டங்களைப் பெற்ற பீற்றர்சன் இப் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராக தெரிவானார். தொடரின் ஆட்டநாயகனாக மஹேல ஜெயவர்த்தன தெரிவானார்.

இத் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றது. இதனால்



2 போட்டிகள் கொண்ட இத் தொடர் 1:1 என்ற வீதத்தில் சமனிலையில் முடிபடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றது. நேற்று நிறைவு பெற்ற 2-வது டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றதன் மூலம் இந்தத் தொடர் 1:1 என்ற கணக்கில் சமன் செய்யப்பட்டது.

மேலும் இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி டெஸ்ட் தரவரிசையில் தனது முதல் இடத்தை தக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லியை வீழ்த்தியது பெங்களூர்




ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் டில்லி அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரின் 5-வது போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்-டில்லி டேர்டேவில்ஸ் அணிகள் நேற்று பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி டேர்டேவில்ஸ் அணியின் தலைவர் வீரேந்திர சேவாக் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனையடுத்து பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களான அண்டரூ மெக்டொனால்டு 30 ஓட்டங்களும் புஜாரா 11 ஓட்டங்களும் எடுத்தனர்.

அடுத்துக்களமிறங்கிய வீராட் ஹோலியும் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். அடுத்ததாக களமிறங்கிய ஏ.பி.டி. வில்லியர்ஸ் மட்டுமே இறுதிவரை ஆட்டமிழக்காமல் 42 பந்தில் 64 ஓட்டங்களை எடுத்தார்.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இறுதியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 157 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து 158 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் டில்லி டேர்டேவில்ஸ் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய அணித் தலைவர் வீரேந்திர சேவாக் ஓட்டங்கள் எதுவுமின்றி புஜாரா பிடியில் ஆட்டமிழந்தார்.


மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான ஆரோன்பின்ச் 25 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய நுவான் ஓஜா 33 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய வேணுகோபால் ராவ் 18 ஓட்டங்களும் யோகேஷ் நகர் 16 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். பின் வரிசையில் களமிறங்கிய இர்பான் பதான் 24 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில் டில்லி டேர்டேவில்ஸ் அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. பெங்களூர் அணியின் முத்தையா முரளிதரன் அதிகபட்சமாக 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

## டெக்கானை வீழ்த்திய சென்னை முதல் வெற்றியை பதிவு செய்தது




ஐ.பி.எல் சீஸன் 5 தொடரின் 6-வது லீக் ஆட்டம் விசாகபட்டினத்தில் நேற்று நடந்தது.

இதில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், கமரூன் வைட் தலைமையிலான டெக்கன் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி சென்னை முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

அந்த அணியின் சார்பில் டு பிளேஸிஸும், முரளி விஜயும் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

முதல் ஓவரிலேயே சென்னை அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த ஓவரின் 5 -வது பந்தில் முரளி விஜய் 2 ஓட்டங்களுடன் அங்கித் சர்மாவின் பந்துவீச்சில் போல்டானார்.

அடுத்து சுரேஸ் ரெய்னா களமிறங்கினார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5.3 ஓவர்களில் 42 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, கிறிஸ்ரியனின் பந்துவீச்சில் அவரிமே பிடி கொடுத்து ரெய்னா 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து பத்ரிநாத் களமிறங்க மறுமுனையில் ஒரு பவுண்டரி, 4 சிக்ஸர்களுடன் அதிரடியாக விளையாடிய டு பிளஸிஸ் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ஜடேஜா 48 ஓட்டங்களுடனும், தோனி 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இறுதியாக சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 193 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு 194 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் டெக்கான் சார்ஜர்ஸ் அணி களமிறங்கியது.

ஆனால் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 17.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

அந்த அணியின் சார்பில் அணித் தலைவர் கமரூன் வைட் 23, பார்த்தீவ் பட்டேல் 20, தவான் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் சார்பில் சிறப்பாக பந்துவீசிய ஜடேஜா 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றி சென்னை அணியின் வெற்றிக்கு உதவியதுடன் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

## சிலை உடைப்பு...

அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக அமைக்கப்பட்டிருந்த அண்ணல் மகாத்மா காந்தி (காந்தி சதுக்கம்) மற்றும் சாரணிய இயக்கத்தின் தந்தை பேடன் பவல் ஆகியோரின் உருவச் சிலைகளின் தலைகள் இனந் தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை முன்றலில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தர் சிலை மற்றும் கல்வி அலுவலக சந்தியில் அமைந்திருந்த புலவர்மணி பெரிய தம்பிப் பிள்ளை ஆகியோரின் உருவச் சிலைகளும் தலைகளும் சேதமாக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ந-8)

## ஜனாதிபதியின்...

உறுதிபடுத்துவதாக குறிப்பிட்டுள்ள இவ்வூடகம், அலுவலக முகவரியாக ஜனாதிபதி செயலகம், காலிமுகத்திடல்; கொழும்பு-1 என முகவரியிடப்பட்டுள்ளதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது.

தனது தந்தை பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என அவரின் மகள் ஹிருனிகா பிரேமச்சந்திர போராடிவரும் நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கொலன்னாவையில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்திருந்தார்.

இச்சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தநாடளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிங்கப்பூரில் மேலதிக சிகிச்சைகளைப் பெற்று வருகின்றார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே பொறுப்பேற்க வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் பகிரங்கமாகவே கூறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8)

## இலங்கை அரசின்...

தோல்வி கண்டது.

அதற்குப் பதிலாக மனிதாபிமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு பாராட்டு தெரிவித்தே பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது.

யுத்தம் நிறைவடைந்த போதும், இலங்கையில் தேசிய பிரச்சினைக்கு யுத்த ரீதியான தீர்வுக்கு இலங்கை அரசாங்கம் நம்பிக்கை கொள்ளவில்லை.

எனினும், 13-வது அரசியலமைப்பு ஊடாக அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என அந்த பிரேரணையில் ஒரு சரத்து உள்ளடக்கப்பட்டிருந்தமையையும் இந்திய எழுத்தாளர் நிரூபமா சுப்பிரமணியம் நினைவு கூர்ந்துள்ளார். (ந-8)

## ஓய்வுபெற்ற...

போதைக்கு ஊகித்து அறிந்து கொள்ளுங்கள் என தகவல் தரவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ந)

## இந்திய நாடாளுமன்ற...

தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் நிர்மாணப் பணிகளையும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு பார்வையிடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

அதேவேளை, இந்திய நாடாளுமன்றக் குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலில் இடம்பெறாத நிலையில் தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகளும் தமது அதிருப்தியை வெளியிட்டன.

இந்நிலையில், இக் குழுவில் தமிழகத் தைச் சேர்ந்த 7 நாடாளுமன்ற உறுப்பினர் களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அதன்படி அ.தி.மு.க. சார்பில் ரபி பெர்ணான்ட், தி.மு.க. சார்பில் டி.கே.எஸ். இளங்கோவன், மார்க்ஸிஸ்ட் கட்சி சார்பில் ரங்கராஜன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கிருஸ்ணசாமி, சுதர்சன நாச்சியப்பன், சித்தன், மாணிக்கதாகூர் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவில் தங்களையும் இணைத்துக் கொள்ளும்படி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.ராஜா ஆகியோர் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் இது குறித்து எந்த முடிபும் எடுக்கப்படவில்லை. (ந-8;11)

## எரிபொருள் பவுஸர்...

கூட்டுத்தாபனத்திடம் தமது சங்கம் கோரிக்கை விடுத்ததாக இலங்கை தனியார் பெற்றோலிய பவுஸர் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா கூறினார்.

அவர்கள் வழங்கும் பணத்தில் எம்மால் செயற் பட முடியாதுள்ளது. அத்துடன் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக போக்குவரத்துடன் தொடர் பான அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளன. எமக்குரிய கட்டணங்களை 35 சதவீதத்தால் அதிகரிக்குமாறு நாம் கோரினோம். இக்கோரிக்கை நிறைவேற்றப் படா விட்டால் எதிர்வரும் 2 நாட் களில் போக்குவரத்தை நிறுத்துவதற்கு எமது சங்கத்தின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது என அவர் தெரிவித்தார். (ந)

## ஜே.வி.பி.மாற்றுக்குழு...

ஆரம்பித்த பிரேமகுமார் குணரட்ணம் என்பவரும் அந்த அமைப்பின் மகளிர் பிரிவு தலைவியான திமுத்து ஆட்டிகல என்பவரும் காணாமல் போயிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று அந்த இயக்கத்தின் பேச்சாளர்கள் கூறினர்.

மக்கள் போராட்ட இயக்கத்தின் சார்பில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள முன் னணி சோசலிஸக் கட்சி என்ற புதிய கட்சியின் மாநாட்டை வரும் திங்கட் கிழமை நடத்தத் திட்டமிட்டிருந்த நிலை யிலேயே இந்தக் கடத்தல்கள் நடந் துள்ளதாக அந்த இயக்கத்தின் பேச்சா ளர் கூறினார். (ந-8)


கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு
Tel : 021-222 4459, 0772533390
Processor, Motherboard, Hard disk, Ram DDR- I, II, III, DVD Writer, Casing, LED Monitor, Keyboard, Laser Mouse, Headphone, Pen drive, 7.2 Multy Dongle, Web camera, Speaker, etc,
(கணனி தொடர்பான அனைத்து பொருட்களையும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்). (C-6308)
NORTH LEAD COMPUTER SALES AND SERVICE CENTER
328A, Stanly Road, Jaffna

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள் மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்
இவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081

புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு...
Jet D Express Courier Service


உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய
Germany Over 10Kg - 800/=
France Over 10Kg - 850/=
UK Over 5Kg - 1000/=
UK Over 10Kg - 750/=
Germany 1kg - 900/=
UK 1kg - 500/=
Swiss 1kg - 500/=
France 1kg - 500/=
Canada 1 kg - 600/=
*.25kg மேற்பட்ட பொருட்களுக்கு 450/= அறவிடப்படும்
மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்
Note : *.கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும்
*.வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
(C-6289)
இல 27, முதலாம் மாடி, நவீன சந்தை, (தனம் ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187301
No.77E, Manning Place, Wellawatta, Colombo 6, T.P:- 0112363873 0776509909

வின்றிச்
10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிறீம் இயந்திரம்
50,000/- மேல் மாத வருமானம்


• சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
• இலவச பயிற்சி
• விற்பனையின் பின் சேவை
விலை ரூ 99,000/- இல் இருந்து
புத்தம் புதியது
WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss Int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902


YOGIS BEAUTY
(Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)
குறுகிய கால அழகுக்கலை புதிய வகுப்புகள் ஆரம்பம்
பல புதிய மாற்றங்களுடன் கூடிய ஒப்பனைகள்
* எமது பிரதேசத்திற்கு ஏற்றவாறும் செய்யக்கூடிய Air Brush Make up மூலம் Bridal Make up
* மற்றும் புதிய யுத்திகளுடன் கூடிய Dance Make up
* Film Make up
* Camouflage Make up (T.V & Photographic)
* Natural Society Make up
* புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய Hair Rebonding & Curling
யாழ் நகரில் முதன் முறையாக இந்த ஒப்பனைகளை அறிமுகப்படுத்துகிறோம்.
MRS.YOGINI SHANMUGANATHAN
Dip in high-tech Aesthetics & cosmetology (India)
Dip in Advanced Bridal make-up & Character Make -up (India)
Dip in Home Economics (Srilanka & India)
Dip in Latest Make- up Hair Bonding, curling (India)

புதிய வகுப்புகள் 15. 04.2012 ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.
என்னிடம் அழகுக் கலை பயிற்சியை முடித்த மாணவிகளும் இந்த புதிய பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளலாம்.
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 2796, 0777 164923
(C-6303)

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
தமிழ் புத்தாண்டை முன்னிட்டு விசேட கட்டணங்கள்

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு),
கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும், வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedioகள் என்பன மிக விரைவாக அனுப்பி DHL
நீங்கள் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே உள்நாடு, வெளிநாடுகளுக்கான DHL சேவையினைப் பெற்றுக்கொளள்ள (Door to door Service)
அழையுங்கள் 021 222 7835, 0719554528
5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
கனடா - 1 kg - 500/=
சுவிஸ் - 1 kg - 400/=
திருமுருகன் கொம் நெற்
DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்
TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18. பிரதான வீதி. நெல்லியடி. இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.